# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183. Cell :9444701953

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

***தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை (2 கொரி 4 : 4)***
***தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிற புருஷனே (1 கொரி 11 : 7)***
***பிரசங்கிக்கலாமேயன்றி, புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்ட,***
***புருஷனின் மகிமையாயிருக்கிற ஸ்திரீ (1 கொரி 11 : 9,7)***
***பிரசங்கிக்க கூடாது! கூடவே கூடாது!!***

1. கர்த்தரால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், விசுவாசிகளும், கீழ்ப்படிதலுக்கு தெரிந்துக்கொள்ளபட்டவர்களுமாகிய அழைக்கபட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:
பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. பெண்கள் பிரசங்கிப்பது குறித்து ஏற்கனவே அக்டோபர், 1990 ல் ஒரு செய்தி வெளியிட்டுள்ளேன். சுமார் 18 ஆண்டுகள் கழித்து மீண்டுமாக 2009 ல் உங்களுக்கு இது குறித்து எழுத கர்த்தர் என் உள்ளத்தில் ஒரு பாரத்தை வைத்தார். அதற்காக நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். நிச்சயமாக இது தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகளுக்கு ஒரு ஆவிக்குரிய ஆகாரமாக இருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

3. கடந்த இதழில் நான் எழுதியபடி என் சொந்த ஊராகிய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டத்தில் உள்ள எனது வீடு பழுதுப்பட்டிருந்தது. பழுது நீக்கும் பணிகளை எனக்கு அறிமுகமான ஒருவருக்கு ஒப்பந்தம் ரூ. 18000/- பேசி ரூ. 15000/- வரை கொடுத்துவிட்டேன். ஒரு கொத்தனார் மற்றும் இரு கையாட்களுக்கு அதிக பட்சம் 10 நாட்கள் வேலையிருக்கும். அவர் சுமார் ஒரு வாரம் வேலை செய்துவிட்டு, மீதமுள்ள பணிகளை அப்படியே போட்டுவிட்டார். சுமார் 1 3/4 ஆண்டுகாலமாக இன்று, நாளை, அடுத்தவாரம், அடுத்த மாதம், இன்று மழை, தற்போது மணல் தட்டுபாடு, இன்று எனக்கு விபத்து, இன்று எனக்கு வியாதி, இன்று வீட்டில் மரணம், இந்த வாரம் எங்கள் ஊர் கோவில் கொடை என அவ்வப்போது பல சாக்குபோக்குகளை சொல்லியே வந்தார். பின் மீதமுள்ள பணம் ரூ. 3000/- தையும் கொடுங்கள், வேலையை முடித்து தருகிறேன் என்றார். நானோ நீங்கள் வேலையை முடித்துக்கொடுங்கள், பின் மீதமுள்ள ரூ. 3000/- தையும் தருகிறேன். உங்களை நம்ப முடியாது என கூறிவிட்டேன். காலங்கள் கடந்துகொண்டு சென்றன. வேலை முடிந்தபாடு இல்லை. முடிவாக, இனி ஊர் சென்று அந்த பணிகளை முடித்துவர வேண்டும் என முடிவெடுத்து திருவைகுண்டத்திற்கு ஒரு வாரம் புரோக்கிராம் போட்டு சென்றேன். நான் சென்று நான்கு நாட்கள் கழித்த பின தான் அந்த ஒப்பந்தக்காரர் வேலையை ஆரம்பித்தார். ஒரு நாள் வேலைக்கு ஆட்கள் வருவார்கள். பின் நான்கு நாட்களுக்கு வரமாட்டார்கள். இப்படியே நாட்களை கழித்து கழித்து நான்கு நாட்கள் வேலையை 23 நாட்களில் முடித்துக்கொடுத்தார். இதிலும் சில பணிகளை தன்னால் முடியாது என கூறி விட்டுவிட்டார்.

4. இந்த நிலையில், நான் திருவைகுண்டத்தில் இருந்த நாட்களில் பக்கத்து ஊர் நாசரேத்தில் எனது உறவினர் வீட்டில் தங்கி வந்தேன். தினமும் காலை 8.00 முதல் 8.30 மணிக்குள் திருவைகுண்டம் புறப்பட்டு வந்து விடுவேன். பின் மாலை 6.00 முதல் 7.00 மணிக்குள் நாசரேத் வருவேன். இரவு வேளைகளில் என் உறவினர் வீட்டில் டி.வி. யில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை காண்பார்கள். நானும் அதில் பங்கு கொள்வேன். அந்நாட்களில் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என கூறிக்கொண்டு, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு (2 கொரி 11 : 14) சாத்தானின் தூதர்கள் மக்களை தங்கள் நிகழ்ச்சிகளின் மூலம் நாங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள், நீங்கள் தேவனுடைய ஜனங்கள் என கூறிக்கூறி அவர்களை வஞ்சிப்பதை என்னால் ஆவியில் உணர முடிந்தது. நிச்சயமாக இது ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம் தான் என்பதை தேவனுடைய ஆவியினால் உணர்தேன், உறுதி செய்துக்கொண்டேன். ஆம், இது 2 தீமோ 3 : 1 - ல் கூறப்பட்டுள்ள கடைசி நாட்களின் கொடிய காலம் தான், வேதவாக்கியங்கள் நிறைவேறுகிறதை கண்டேன். நாள்தோறும் டி.வி. யில் அக்கிரமக்காரர்களுடைய அக்கிரமக்கிரியைகளை கண்டு என்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டேன்.

5. நான் எனது வீட்டில் டி.வி. வைப்பது இல்லை. டி.வி. பிசாசு என்பது எங்களது விசுவாசம். பிசாசை கட்டி வீட்டில் வைத்து அதற்கு தீனி போட்டு வளர்க நாங்கள் விரும்பவில்லை. டி.வி. யில் 10% நன்மைகள் உண்டு என்றால் 90% தீமைகள் என்பது எங்கள் கருந்து. நாட்டின் நடப்பு செய்திகளை அறிய தினசரி நாளிதழ் வாங்கி அறிந்துக்கொள்கிறோம்.

6. இங்கு பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. எனது மூத்த மகனுக்கு

ஒரு பெண்ணை பார்க்க சென்றிருந்தேன். அவர்கள் C.S.I. கிறிஸ்தவர்கள். அவர்களிடம் ஒரே தேவன், அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என தேவத்துவத்தை குறித்து பேசினேன். பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என ஒரே ஞானஸ்நானத்திற்கு அடுத்த காரியங்கள் குறித்து பேசினேன். அனைத்திற்கும் அவர்கள் சரிதான், சரிதான் என்றார்கள். வந்த காரியம் முடிந்தது என எண்ணினேன். அந்த வேளையில் அவர்கள் வீட்டில் ஒரு மூலையில் உள்ள டி.வி. என் கண்களில் பட, இது என் வீட்டில் இருக்காது, அதை வீட்டில் வைப்பதை விரும்புவதும் கிடையாது, அது பிசாசு என்றேன். பெண் வீட்டார் டி.வி.யில் மிக்க ஆர்வம் உள்ளவர்கள். அவர்கள் முகங்கள் வேறுபட்டது. முடிவில் பெண் கொடுக்க தயங்கினார்கள். அதிலிருந்து அவர்களுக்கு டி.வி. யின் மேல் உள்ள நாட்டத்தை அறிந்து நானும் அந்த வீட்டில் பெண் எடுக்க தயங்கினேன்.

7. **நான் டி.வி. பார்த்த வேளைகளில் பல நிகழ்ச்சிகள் எனக்கு அருவருப்பாகவே இருந்தது. அவைகளில் சிலவற்றை இங்கு எழுதுகிறேன்.** சுமார் 40 வயதிற்கும் மேல் உள்ள ஒருவர் பாடுகிறார். அவருக்கு பக்க பெலனாக சில வாலிபப்பெண்கள் நாட்டியம் ஆடுகின்றனர். ஒருவனுக்கு தண்ணி போட்டால் தான் பாட்டு எழுத, பாட முடிகிறது. இவருக்கு பக்கத்தில் சில குட்டிகள் ஆடினால் தான் பாட்டு பாட மூடு வருகிறது. இதெல்லாம் என்ன? மயக்கி இழுக்கும் பிசாசேயன்றி வேறுஎன்ன? அன்று பக்தன் தேவனுடைய ஆவியில் நிறைந்து, உள்ளம் உருக ஆவியோடும் கருத்தோடும் பாடினான். இன்று போலி பக்தர்கள், குட்டிகளை தங்கள் உடம்பை குலுக்கி, குலுக்கி அசைத்து, அசைத்து ஆடவைத்து பாடுகிறார்கள். மக்கள் சினிமா காட்சிகளை போன்று பாடல்களை ரசித்து, பெண்கள் உடம்பை குலுக்கி அசைப்பதையும் பார்த்து ரசிக்கிறார்கள். கிறிஸ்தவ ஸ்தாபனசபை உலகம் எங்கு சென்றுகொண்டிருக்கிறது என்பதை உங்களால் காண முடிகிறதா? பாதாளம் சென்றுகொண்டிருப்பதை தான் என்னால் காண முடிகிறது.

8. அடுத்து சுமார் 25/30 வயதுக்குள் உள்ள ஒரு நபர் மேடையில் மைக்கை தன் கையில் பிடித்துக்கொண்டு, அங்கும் இங்கும் நடந்து பாடுகிறார், ஆடுகிறார், குதிக்கிறார். அங்கும் சுமார் 10/15 வாலிபப் பெண்கள் நீலநிறத்தில் பேன்ட் மற்றும் வெள்ளை இறுக்கமான சர்ட் அணிந்துக்கொண்டு தங்களை ஆட்கொண்ட வேறொரு ஆவியினால் பரவசத்துடன் உடம்பை முன்னும் பின்னும் அசைத்து, குலுக்கி பாடுகிறார்கள். ஒரே கும்மாளம் தான். இதை பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, எனக்குள் இருந்த தேவனுடைய ஆவியினால் காரித் துப்பவே தோன்றியது. அந்த அளவிற்கு ஆத்திரம். நிச்சயமாக தேவன் பாடல்களால் தாம் ஆராதிக்கப்பட விரும்புகிறார். நீங்கள் அவரை ஆராதிக்கும் போது ஆவியோடும் கருத்தோடும் பாடவேண்டும் (1 கொரி 14:15) சுவிசேஷப் பாடல்கள் என்கிறார்கள். பாடுபவர்கள் தங்களை உலகப்பிரகாமான இசை, கலை நிகழ்ச்சிகளில் பாடல்கள் பாடுபவரைப்போன்று, சினிமாக்களில் பாடல்களுக்கு நடக்கும் ஒரு நடிகனைப்போன்று நடந்துக்கொள்கிறார்கள். அவர்கள் நடத்தை, தங்கள் உடலை குலுக்குதல், அசைத்தல் போன்றவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவுக்கு நிச்சயமாக இழிவையே கொண்டு வருவதாக அமைந்துள்ளது. கிறிஸ்தவ பாடல் நிகழ்ச்சிகள் ஒரு கேலிக்கூத்தை போன்று காட்சியளிக்கிறது. சுவிசேஷ பாடல்கள் என கூறிக்கொண்டு வாலிபப் பெண்களும் ஆண்களும் மேடைகளில் நின்று மக்கள் முன் தங்கள் உடம்பை முன்னும் பின்னும் ஆட்டியும், குலுக்கியும் : இங்கும் அங்கும் ஆடிக்கொண்டு குதித்துக்கொண்டு டப்பாக்குத்து, ஆறுதல், சோகப்பாட்டுகள் பாடுவது என்ன? இது இயேசுவை பரிகாசம் செய்வதாகும். நன்றாக பாடும் பாடகர்கள் தங்கள் திறமைகளை சாத்தானுக்கு விற்று போட்டுவிட்டார்கள். இவர்கள் பலவிதமாக வாத்திய கருவிகள், அவைகளை வாசிப்பவர்கள், இவைகளைக் கொண்டு நன்றாக பாடுகிறார்கள். பாடல்களை ஒலி நாடாக்களில் பதிவு செய்கிறார்கள். பின் அவைகளை விற்பனை செய்கிறார்கள். உதரணமாக பாடல்கள் பதிவு செய்ய ரூ. 20/- முதல் ரூ. 25/- வரை செலவாகிவிடுகிறது என்றால் இதை ரூ. 40/- முதல் ரூ 45/- வரை விற்கிறார்கள். கொள்ளை லாபம். கர்த்தர் கொடுத்த திறமையை வியாபாரம் ஆக்கிவிட்டார்கள். சாத்தானுக்கு தங்களை விற்றுப்போட்டுவிட்டார்கள்.

9. இதே பாணியில்தான் சில ஆவிக்குரிய வரங்களை பெற்றவர்கள் அதையும் வியாபாரம் ஆக்கி விடுகிறார்கள். சுகம் அளிக்கும் கூட்டம் என கூறி வியாபாரம். எண்ணெய் தடவி வியாபாரம், பில்லி சூனிய கட்டிலிருந்து விடுதலை, கடன் தொலையிலிருந்து விடுதலை, வியாதியிலிருந்து விடுதலை, வறுமையிலிருந்து விடுதலை என விடுதலை கூறி இந்நாட்களில் வியாபாரம் மும்முரமாக நடக்கிறது. இவ்வாறாக ஜனங்களை இம்மைகுரியவைகளுக்காக கிறிஸ்துவின் மீது நம்பிக்கைக்கு வழி நடத்தவே உபாத்தியாயர்கள் பதினாயிரம் உண்டு. ஆனால் சத்தியத்தை கூறி, கடிந்து கண்டனம் பண்ணி, புத்தி சொல்லி நித்திய ஜீவனுக்கென்று மக்களை வழி நடத்த தகப்பன்மார் இல்லை, இல்லவே இல்லை.

10. பரிசுத்த மனிதர்கள் ஆவியில் நிறைந்து ஆவியோடும் கருத்தோடும் இருதயத்தின் ஆழத்திலிருந்து சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுக்களையும் பாடி, பக்தி பரவசம் ஆகிறார்கள். இவர்கள் தங்கள் பாடல்களை ஒரு லாபத்திற்கு விற்பனை செய்வது இல்லை. ஏனென்றால் அவைகள் தேவனுடைய ஆவியினால் தேவனை துதித்து பாடிய பாடல்கள் ஆகும். ஒருவன் பக்தி பரவசத்தில் தேவனை துதித்து பாடிய பாடல்கள் விற்பனைக்கா? No, No; Never. ஆனாலும் அவைகளை எந்த விதமான லாபமின்றி செலவான தொகைக்கு விற்பதில் தவறு எதுவுமில்லை என்பது என் கருத்து. ஆம், ஒருவர் வியாபாரத்திற்காக பாடிய பாடல்கள் தான் விற்பனைக்கு வருகிறது. சாத்தான் விற்பனையை அதிகரிக்க கையாளவேண்டிய அனைத்து திறமைகளையும் கடைப்பிடிக்கிறான். அந்த திறமைதான் என்ன? கவர்ச்சி. கவர்ச்சியை காட்டி மக்களை

மோசம் போக்குகிறான். ஆக, கிறஸ்தவ பாடல்களில் இந்நாட்களில் கவர்ச்சிதான் எங்கும் தலைவிரித்து ஆடுகிறது. பக்திக்கு எங்கும் வழியில்லை.

11. காயின் அப்படிப்பட்ட ஒரு பாடகனாகத்தான் இருந்தான். அவன் நிச்சயமாக தன் செயல்களில் மதாபிமானம் கொண்டவனாகவே இருந்தான். ஒரு உண்மையான கிறிஸ்தவனை போன்றே பார்வைக்கு காணப்பட்டான். நன்றாக பாடினான், ஆடினான். பிறரை மகிழ்வித்தான். ஆனால் அவனுக்குள் இருந்தது தவறான வித்து. அதுபோலத்தான் நம்முடைய பாடகர்களும் இருக்கிறார்கள். அவர்களின் நடை, உடை பாவனைகள் அனைத்தும் அவர்கள் தவறாக வித்து என்பதை காட்டுகிறது. தேவனுடைய வித்து அடக்க, ஒடுக்கத்துடன், மாம்ச உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காது ஆவியோடும், கருத்தோடும், பயபக்தியுடன் பாடுகிறார்கள். பாடகர்களில் பலர் தேவனால் தங்களுக்கு அளிக்கபட்ட தாலந்துகளை பிசாசின் கிரியைகளை ஊக்குவிக்க பயன்படுத்துகிறார்கள். சிறந்த பாடகர்கள் தேவனால் தங்களுக்கு கொடுக்கபட்ட தாலந்துகளை உலகப் புகழுக்காக, பணத்திற்காக, சொத்து சுகங்களை சேர்ப்பதற்காக, சுகபோகமாக வாழ்வதற்காக, விக்கிரக ஆராதனையாகிய பொருளாசைக்கு விற்றுப்போட்டு பிரபலமாகிறார்கள். அவர்கள் தேவனுடைய குமாரனாக ஆகாமல், அதற்கு பதிலாக உலகில் பிரபலம் வாய்ந்த ஒருவான ஆகிறார்கள். இவை யாவும் பிசாசின் கிரியைகளே. தந்தையும், மூன்றாம் வானமும் இந்த ரகத்தை சேர்ந்தவர்களே.

12. அடுத்து சுமார் 35/40 வயது இருக்கும் ஒருவர் ஆங்கிலத்தில் பிரசங்கம் பண்ணுகிறார். அங்கும் இங்கும் நடந்துக்கொண்டு, குதித்துக்கொண்டு, தாவிக்கொண்டு, துள்ளிக்கொண்டு மேடையை ஒரு கலக்கு கலக்குகிறார். அவருடன் அவருடைய மொழிபெயர்பாளரும் அவருடைய கிரியைகளை செய்கிறார். அவ்வப்போது அல்லேலூயா சொல்லுங்கள் என்று கூற, மக்கள் மத்தியிலும் அல்லேலூயா கோஷம் எழுந்தது. அந்த நிகழ்ச்சியில் நேரம் போகிறதே தெரியவில்லை. நல்லதொரு பொழுது போக்காக இருந்தது. பலர் தங்கள் முன் சிறு குறிப்பு எழுதும் நோட்புக் மற்றும் பென்சிலோடு உட்கார்ந்திருப்பதை கண்டேன். ஊழியர் வாயிலிருந்து வெளிவரும் தீர்க்கதரிசனங்களை குறித்துக்கொள்ளவோ என்னவோ எனக்கு தெரியாது. இதுவரை எத்தனை தீர்க்கதரினங்களை கூறினார்? எத்தனை வெடித்தது? எத்தனை புஷ்வானமாக போனது?

13. ஒரு நிகழ்ச்சியில் ஒரு புருஷனும் அவர் மனைவியும் அனனியா, சப்பீராள் போன்று ஒருமனப்பட்டு தேவனை வஞ்சிக்கிறதை கண்டேன். அவர்கள் பிரசங்கத்தில் தங்கள் ஊழியம் ஒரு விசுவாச ஊழியம். தேவன் பேரில் கொண்டுள்ள விசுவாசத்தில் நடந்துவருகிறது. அவர் தேவைகளை அவ்வப்போது சந்தித்து வருகிறார். ஊழியம் நடக்கிறது என தங்களை ஆபிரகாமின் சந்ததியாராக பெருமை படுத்திக்கொண்டார்கள். நல்லது. ஆனால் மற்றொரு பக்கம், கர்த்தர் ஐந்து அப்பங்களையும் இரு மீன்களையும் கொண்டு ஐந்தாயிரம் பேரை போஷித்தார். நீங்கள் ஐந்து அப்பங்களுக்கு எடுத்துக்காட்டாக ரூ. 50/-, ரூ. 500/- பிரதி மாதம் அல்லது இரு மீன்களுக்கு எடுத்துக்காட்டாக ரூ. 200/-, ரூ. 2000/- பிரதி மாதம் அல்லது ஐந்து அப்பம் இரு மீன்களுக்கு எடுத்துக்காட்டாக ரூ. 70/-, ரூ. 700/- பிரதி மாதம் கொடுத்து இந்த ஊழியத்தை தாங்க ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் பங்காளர் ஆகுங்கள் என பொருளாசை உள்ளவர்களாய் மக்களை மோசம் பண்ணுகிறதை கண்டேன். இந்த மாயத்தின் ஊற்று எங்கிருந்து புறப்படுகிறது? சாத்தானிடமிருந்தே. அவன்தான் இப்படிபட்ட மாய்மாலத்தின் ஊற்று.

14. ஒரு வாலிபப்பெண் பாடுகிறாள். அதில் சுமார் 5/6 சரணங்கள் உண்டு. ஒவ்வொரு சரணத்திற்கும் விதவிதமான ஆடைகள் அவள் கவர்ச்சியை வெளிப்படுத்துகிறது. அனைத்தும் சினிமா பாடல்கள் பாடும் பாணியில் தான். கிறிஸ்தவ பாடல்கள் என கூறிக்கொண்டு சாத்தான் மக்களை தங்களின் இச்சைகளுக்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் வழிநடத்துகிறதையே கண்டேன்.

15. ஒரு பெண்மணி ஜெபம் பண்ணுகிறதை கண்டேன். ஜெபத்தில் ஒரே அந்நியபாஷை தான். அவர்கள் பேசிய பாஷையை கர்த்தர் அறிவார். அது உண்மையான ஒரு அந்நியபாஷை அல்ல, ஒரு மாய்மாலம் என்பதை நான் கர்த்தருடைய ஆவியினால் உணர்ந்தேன். இந்த அம்மாவின் அந்நிய பாஷைகளை 1 கொரி 14 அதியோடு ஒத்துப்பார்த்தால் அது தேவனுடைய வார்த்தைக்கு மாறாக இருக்கிறது. ஆதலால் அதன் ஊற்று பிசாசே. பிசாசு அந்த பாஷை பேசுகிறவர்களையும் வஞ்சிக்கிறது. கேட்கிறவர்களையும் வஞ்சிக்கிறது. தேவனால் தெரிந்துக்கொள்ளப்படாதவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

16. அடுத்து ஒரு பெரியர் தன் தலையை நன்கு அசைத்து அசைத்து கண்களை மூடி கொண்டு உருக்கத்துடன் பாடினார். நான் எப்பொழுதுமே அவருடைய பாடல்களை ரசிப்பவன். அவர் தான் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டதாக தன் பிரசங்க வேளையில் பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறுவதை கேட்டேன். பரிசுத்த வேதாகமத்தில் 2 கொரி 12 அதியில் பவுல், தான் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டதாக கூறுகிறான். வேறுயாரும் மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளபட்டதாக வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் இல்லை.

17. பவுல் கிறிஸ்துவுக்காக பட்ட பாடுகளை சற்று நீங்கள் தியானிப்பீர்களானால் அது உங்களுக்கு இந்த காரியத்தை குறித்து நிதானிப்பதற்கு ஒரு ஊன்று கோலாக இருக்கும். பவுல் தன் ஊழியத்தின் பாதையில் தன் ஓட்டத்தின் முடிவுவரை:

1. பசியுள்ளவனாக இருந்தான். பசியின் கொடுமை அவனை வாட்டியது. சிறுகுடலை பெருகுடல் விழுங்கியது
2. தாகமுள்ளவனாக இருந்தான். அவன் நாவு பாலைவனம் போல் வறண்டு போய் தண்ணீருக்காக ஏங்கியது.

அதை கொடுப்பார் யாருமில்லை.

3. உடுக்க ஆடையில்லாமல் நிர்வாணத்தில் இருந்தான். அவனை போர்த்த ஒரு நல்ல சமரியன் யாருமில்லை.
4. பவுலை அவன் ஜனங்கள் தங்கள் கரங்களினால் அடித்தார்கள். அவனோ அவர்களை மன்னித்தான்
5. தங்க இடமில்லாதவனாக இருந்தான். மழை, வெயிலில் தன்னை பாதுகாத்துக்கொள்ள அவனுக்கென்று ஒரு ஓலை குடிசை கூட இல்லை. சிறிது நேரம் இளைப்பாற இடமில்லதவனாக இருந்தான். திறந்த வானவெளியே அவனுக்கு வீடாக இருந்தது.
6. தன் கரங்களினால் வேலை செய்து பாடுபட்டான். கிடைத்ததை கொண்டு சாப்பிட்டான். பிறரையும் புசிக்க வைத்தான்.
7. தன் ஜனங்களால் தூஷிக்கப்பட்டான். அவனோ அதை பொறுத்துக்கொண்டான்.
8. அநேகரால் துன்புறுத்தப்பட்டான். அவனோ அவைகளை சகித்தான்.
9. உலகத்தின் பார்வைக்கு குப்பை போலவும், எல்லோரும் துடைத்துப் போடுகிற அழுக்கை போலவும் காணப்பட்டான்.
10. உலகத்திற்கும், தூதர்களுக்கும், மனுஷருக்கும் வேடிக்கையாக காணப்பட்டான். மேற்கூறியவைகள் குறித்து 1 கொரி 4 அதி 9-14 வசனங்களில் தியானியுங்கள்.
11. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக இரவும், பகலும் பிரயாசப்பட்டான்.
12. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக அதிகமாக அடிபட்டான்.
13. அநேக முறை காவல்களில் வைக்கப்பட்டான்.
14. அநேக முறை மரண அவதியில் அகப்பட்டான்.
15. யுதர்களால் ஒன்று குறைய நாற்பதடிகளாக ஐந்து தரம் அடிபட்டான்.
16. மூன்று தரம் மிலாறு களால் அடிபட்டான்.
17. ஒரு தரம் கல்லெறியுண்டான்.
18. மூன்று தரம் கப்பல் சேதத்தில் இருந்தான்.
19. கடலில் ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினான்.
20. அநேக தரம் பிரயாணம் பண்ணினான்.
21. ஆறுகளினால் பிரயாணத்தின் போது மோசம் உண்டானது.
22. கள்ளர்களினால் மோசம் வந்தது.
23. தன் சுய ஜனங்களினால் மோசம் வந்தது.
24. அவன் பிரயாணப்படும் பட்டிணங்களிலெல்லாம் அவனுக்கு மோசம் வந்தது.
25. பிரயாணத்தின் போது வனாந்தரத்தில் உண்டான மோசம்.
26. பிரயாணத்தின் போது சமுத்திரத்தில் உண்டான மோசம்.
27. பிரயாசத்தில், வறுத்தத்தில் அநேகமுறை கண் விழுப்புகளில், பசியில், தாகத்தில், அநேக முறை உபவாசத்தில், குளிரில், நிர்வாணத்தில் இருந்தான்.
28. எல்லா சபைகளை குறித்தும் உண்டான கவலை அவனை நாள்தோறும் நெருக்கியது, வாட்டியது.
29. தமஸ்கு பட்டிணத்தில் அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் அவனை பிடிக்க பட்டிணத்தை காவல் வைத்த போது, கூடையிலே வைக்கப்பட்டு ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைக்கு தப்பினான். மேற்கூறிய சம்பவங்கள் குறித்து நீங்கள் 2 கொரி 11 : 23-33 வசனங்களில் தியானிக்கலாம்.
30. இவனுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குறிய மேன்மையின் நிமித்தம் அவன் தன்னை உயர்த்தாத படிக்கு மாம்சத்தில் ஓர் முள் கொடுக்கப்பட்டது (2 கொரி 12 : 7)
31. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா பட்டிணங்களில் இவனுக்கு துன்பங்கள், பாடுகள் (2 தீமோ 3:11, அப் 14: 8,19 : 16 : 22,24)
32. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறென்றையும் ஜனங்கள் அறியாதிருக்க தீர்மானித்து ஊழியம் செய்தான் (1 கொரி 2 : 2)
33. இவனுடைய பேச்சும், பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குறிய நயவஞ்சகமுள்ளதாயிராமல் ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்பட்டதாய் இருந்தது. தன் டாக்டர் பட்டத்தை குப்பை என எண்ணினான்.
34. பிழைப்போம் என்கிற நம்பிக்கை அன்று போகத்தக்கதாக தன் பலத்திற்கு மிஞ்சின அதிய வருத்தம் அவனுக்கு உண்டாயிற்று (2 கொரி 1 : 8)
35. தன் ஊழியம் குற்றப்படாதபடிக்கு யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் எல்லாவற்றிலேயும், தன்னை தேவனுடைய ஊழியக்காரனாக விளங்கப்பண்ணினான். (2 கொரி 6 அதி)
36. கர்த்தருக்கு முன்பாக மாத்திரம் அல்ல மனுஷர்களுக்கு முன்பாகவும் யோக்கியமானதை செய்தான் (2 கொரி 8 : 21)
37. தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாக பிரசங்கித்தான் (2 கொரி 11 : 7)
38. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமையோடும் ஜனங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டது (2 கொரி 12 : 12)
39. ஆத்துமாக்களுக்காக மிகவும் சந்தோஷமாய் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்பினான் (2 கொரி 12 : 15) ஆத்துமாக்களை கொள்ளையிடவிரும்பவில்லை, தனக்கு பணம் தேவைப்படும் சமயங்கள் எல்லாம் பல திட்டங்களை தீட்டவில்லை.
40. விசுவாசிகளுடைய பணத்தை, சொத்துக்களை ஆஸ்திகளை நாடாமல் விசுவாசிகளையே நாடினான். அவர்கள் ஆத்தும இரட்சிப்பையே தேடினான், நாடினான். அதற்காக பிரயாசப்பட்டான் (2 கொரி 12 : 14) எப்படியாவது தன் ஜனங்களை இரட்சிப்புக்குள் கொண்டு வரவேண்டும் என்ற மனபாரத்துடன் பிரயாசப்பட்டு அதற்காக உழைத்தான், ஊழியம் செய்தான்.
41. பவுலுக்கு கிறிஸ்து ஜீவன். சாவு ஆதாயமாக இருந்தது (பிலி 1 :21)
42. கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் மரணத்திற்கு சமீபமாய் இருந்தான். (பிலி 2:30)
43. சத்தியத்தை எடுத்துச்சொல்லி, கடிந்து கொண்டு, கண்டனம் பண்ணி மக்களுக்கு புத்தி சொன்னதினால்

அவர்களுக்கு சத்துருவானான் (கலா 4 :7)

44. பவுல், தான் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்கிறான் (கலா 2:20)

18. இப்படியாக கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக பவுல் பட்ட பாடுகள், பிரயாசங்கள் நீண்டு கொண்டே செல்கிறது. அவன் தன் ஊழியத்தின் பாதையில் தனக்கு சம்பவித்த பாடுகள், கஷ்ட நஷ்டங்கள், துயரங்கள், துக்கங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று என்கிறான் (பிலி 1:10) இவன் தான் தேவனுடைய மனுஷன். ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன். ஆதலால் தான் மூன்றாம் வானம் வரை எடுத்தக்கொள்ளப்படும் சிலாக்கியத்தை கர்த்தரிடத்தில் பெற்றான்.

19. ஆனால் நம் மத்தியில் தான் மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டேன் என்பவருடைய பாடுகளையும் பிரயாசங்களையும் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். மறைந்த அவரின் மேன்மை பவுலின் பாடுகளில் ஒரு சதவீதம் இருக்குமா? சற்று சிந்தியுங்கள், செயல்படுங்கள். இவருடைய ஊழியம் பகல் கொள்ளையேயன்றி வேறு என்ன?

20. தைரியமாய் தன் வாயை திறந்து சுவிசேஷத்தின் ரகசியத்தை (அப் 2 : 38) அறிவிக்கிறதற்கு பதிலாக மனுஷருகென்று ஊழியம் செய்தார் (எபே 6 : 20,8) சத்தியத்தை அநியாத்தினால் அடக்கிவைத்தார் (ரோ 1:18) மனுஷர்களை பிரியப்படுத்தவே விரும்பினார். அரசியல் வாதிகளை பிரியப்படுத்தவே விரும்பினார். ஸ்தாபனசபைகளை பிரியப்படுத்தவே விரும்பினார். விக்கிரக ஆராதனைகாரர்களை பிரியப்படுத்தவே விரும்பினார். இவர் தான் தேவன் ஒருவர், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி தேவனுடைய தன்மைகள், பதவிகள், பட்டங்கள் என விசுவாசித்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார். அதை ஜனங்களுக்கு உபதேசித்தாரா? இல்லவே இல்லை. ஏன்? கேயாசியை போன்று பொருளாசைக்கு தன்னை விற்றுபோட்டார். சத்தியத்தை சொன்னால் கிறிஸ்துவ ஸ்தாபன சபைகளில் இடம் கிடைக்காது, சம்பாதிக்க முடியாது, தன் திட்டங்களை நிறைவேற்ற முடியாது என அறிந்து தான் கரம் பிடித்த சத்தியத்தை மறைத்து தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையையே அதிகமாக விரும்பினார் (யோ 12:43) மனுஷர்களுக்கு பிரியமாய் இருக்க விரும்பி பார்வைக்கு ஊழியம் செய்தார் (எபே 6 : 6)

21. நம்முடையவருக்குள் கிறிஸ்துவுக்கு பதிலாக சாத்தான்தான் பிழைத்திருந்தான். ஆதலால் தான் நயவசனிப்பினாலும், சாதுரியமான பேச்சினாலும் மக்கள் மனதை மயக்கி, வசிகரித்து பொருளாசை உடையவராய் மாய்மாலம் பண்ணினார், கல்லூரிகளை கட்டினார், கோபுரங்களை எழுப்பினார், தன் குடும்ப வாரிசுகளுக்கு பல தலைமுறைக்கு சொத்துகளை சேகரித்தார். நான் வில்லியம் மாரியன் பிரன்காம் என்ற ஊழியக்காரரை முகமுகமாக பார்க்காவிட்டாலும், அவருடைய ஊழியங்களை அறிவேன். அவர் ஒரு தேவனுடைய மனுஷன். தீர்க்கதரிசி என நான் விசுவாசிக்கிறேன். அவருக்கு அவருடைய ஊழியத்தில் பணம் வந்து குவிந்தது. நம்முடையவருடைய சொத்து சுகங்களை பார்க்கிலும் பல மடங்கு அவருடைய ஊழியத்தில் பணம் வந்து குவிந்தது. பாருங்கள், அவரோ தன் குடும்பத்தை போஷிக்க ஒரு வாரத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை கேட்டு வாங்கிக்கொண்டு தன் குடும்பத்தை பராமரித்தார். மற்றபடி ஊழியத்தின் பேரில் வந்த எந்த விதமான பணத்திலும் தலையிடுவதில்லை. இது தான் தேவனுடைய மனுஷனின் பாதை. உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனின் வழி. ஊழியத்தின் பாதையில் வரும் பணம் அனைத்தையும் ஊழியத்திற்கே செலவிட்டு தனக்கு ஒரு தொகையை சம்பளமாக பெற்றுக்கொண்டார். மேலும் ஊழியத்தின் பாதையில் வருகிற பணத்தை நிர்வகிக்க தனி குழுவை அமைத்து, நல்லமுறையில் செயல்படுத்தி காட்டினார்.

22 நம்முடையவரோ பணம் சம்பாதிக்கவே அவ்வப்போது பல திட்டங்களைத்தீட்டுவார். அதை கர்த்தர் கூறினார், கொடுத்தார் என்று தந்திரமாக கூறி மக்களை கவர்ச்சிப்பார், வஞ்சிப்பார். பல்கலைகழகத்தை கட்ட பணம் திரட்டினார். ஆனால் நான் கூறிய தேவனுடைய மனுஷனோ ஊழியத்தை தவிர தன்னை எந்த வகையிலும் ஈடுபடுத்திகொள்ளவில்லை. பணம் திரட்ட எந்த திட்டத்தையும் தீட்டவில்லை. பணத்திற்காக விளம்பரம் எதுவும் செய்வதில்லை, சுவிசேஷ கூட்டங்களில் காணிக்கை எதுவும் எடுப்பதில்லை. ஆனாலும் பணம் அவரை தேடி வந்து குவிந்தது. ஆனால் அவரோ அதை நாடவில்லை. ஆனால் தன் சொந்த செலவிற்கு தேவையான பணத்தை கேட்டு பெற்றுக்கொண்டார். எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக கேட்டு பெற்றுக்கொண்டார். அது தான் வாசல் வழியாய் பிரவேசிக்கிற மேய்ப்பனுக்கும், வேறு வழியாய் ஏறுகிற மேய்ப்பனுக்கும் உள்ள வித்தியாசம். நிச்சயமாக DGS வேறு வழியில் ஏறின மேய்ப்பனே.

23. தன் காரியங்களை சமாளிக்க, பல்கலைகழகத்திற்காக, கர்த்தர் திட்டமிட்டு செயல்படுத்த கொடுத்த பல்கலை கழகம் எனக்கூறி, அதன் அங்கீகாரிப்பிற்காக ஒரு விக்கிரக ஆராதனைகாரர்களின் தலைவனிடம் சென்று பூஜைக்குரிய சாமான்களை வாங்கி கொடுத்து தன் காரியத்தை சமாளித்து வந்தார். இயேசு கிறிஸ்துவின் திட்டம் என கூறி அரசியல்வாதிகளின் கா:லடியில் விழுந்தார், விக்கிரக ஆராதனைகாரர்களிடம் காவடி எடுத்து சென்றார். இயேசு கிறிஸ்துவை நிந்தித்தார், தூஷித்தார், மறுதலித்தார், இயேசு கிறிஸ்துவின் நாமத்தை வீணிலே வழங்கினார். ஆம், நிச்சயமாக அவர் ஒரு தேவபக்தியின் வேஷத்தைத்தரித்த மனுஷனாகவே தன் ஊழியத்தின் பாதையில் காணப்பட்டார், அடையாளம் கண்டுகொள்ளபட்டார். அதை அறிந்தவர்கள் என்னை போல் ஒரு சிலரே. நூற்றுக்கு 99% மக்களின் கண்கள் குருடாக்கப்பட்டது.

24. சுவிசேஷ கூட்டங்களுக்கு தன்னை அழைப்பவர்களிடம் பணவிஷயத்தில் பேரம்பேசி தனக்கு இவ்வளவு வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தி அதன்பின் தான் ஊழியத்திற்கு செல்வார்.

25. அடுத்து முடிவாக, நிச்சயமாக, உறுதியாக இவர் ஒரு ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்த சாத்தானுடைய ஒரு ஊழியக்காரனே அன்றி வேறுயாருமில்லை. இவருடைய ஊழியத்தின் மேன்மை என்ன? பலகோடி மதிப்புள்ள பல்கலை கழகம், பற்பல மாடிகட்டிடங்கள், ஜெபகோபுரங்கள் முதலானவைகளே. கோடி கோடியாக சொத்து சுகங்களை தன் வாரிசாருக்கு பல ஆண்டுகள் அனுபவிக்க விட்டு சென்றதே. நான் அதை கர்த்தர் எனக்கு கொடுத்த ஆவியினால் பகுத்தறிந்தேன். நான் அறிந்ததை ஜனங்களுக்கு எடுத்து கூறி அவர்களை எச்சரிக்கும் ஊழியம் எனக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தின் ஒரு பாகமாக இருக்கிறது. ஆனாலும் என் மூலமாய் கேள்விபட்டதை விசுவாசித்தவர்கள் யார்?

26. அடுத்து சில பெண்கள் அமைதலாக பிரசங்கம் செய்வதை டி.வி.யில் பார்த்தேன். ஒரு வெளிநாட்டு பெண் ஆண்களின் உடைகளை அணிந்துகொண்டு, கரத்தில் மைக்கை பிடித்துக்கொண்டு மேடையில் அங்கும் இங்கும் நடந்துகொண்டு பிரசங்கம் பண்ணுவதை கண்டேன். புருஷனின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது. ஸ்திரீயின் உடைகளை புருஷர் தரிக்கலாகாது. அப்படி செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். (உபா 22:5) பெண்கள் பிரசிக்கிப்பது குறித்துதான் நாம் இங்கே தியானிக்கப்போகிறோம்.

27. ஆக அறுதினமும் டி.வி.யில் சினிமா பாணியில் நடந்தவைகளையும், தேவமனுஷரின் வேஷத்தை தரித்தவர்களின் வேற்றுமையான உபதேசங்களையும், அந்நிய போதனைகளையும் கொண்டு மக்கள் வஞ்சிப்படுவதையும் பார்த்து பார்த்து என் மனம் புண்பட்டது. ஒரு பக்கம் அவைகளை பார்க்க வெறுப்பு. மறுபக்கம் என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம் என்ற ஆவல். இவ்வாறாக சுமார் 23 நாட்கள் கழிந்தன. இதற்காகத்தான் கர்த்தர் என்னை நாசரேத் ஊரில் என் உறவினர் வீட்டில் தங்க வைத்திருக்கிறார். அவர் காரணம் இன்றி என்னை எங்கும் தங்க வைப்பதில்லை என்பதை பின்பு உணர்ந்துகொண்டேன். நான் கண்ட டி.வி. நிகழ்ச்சிகளில் ஒரு சில தவிர மற்றவைகள் யாவும் பிசாசினுடையதே. ஆம் டி.வி. பிசாசாக செயல்படுகிறது என்பதை உறுதி செய்து கொண்டேன். நற்செய்தி என்ற பெயரில் சாத்தான் மக்களை வஞ்சிப்பதை கண்டேன். இன்றைய கிறிஸ்தவ டி.வி. நிகழ்சிகளில் சத்தியத்திற்கு இடமே இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களை கேட்க முடியவில்லை. தேவபக்திகேற்ற உபதேசங்களை கொண்டுவருவார் இல்லை. எங்கும் எதிலும் வேற்றுமையான உபதேசங்களையே கேட்டேன், கண்டேன். (1 தீமோ 6 : 3) எங்கும் ஒரே வஞ்சிபும் ஏமாற்றமும் தான். ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.

28. இப்பொழுது நான் பார்த்த அருவருப்புகளில் ஒன்றாகிய கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பெண்கள் பிரசங்கம் செய்வது குறித்து அதாவது தேவனுடைய சாயலாயிருகிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை (2 கொரி 4:4) பெண்கள் பிரசங்கிக்கலாமா என்பது குறித்து ஆவியானவருடைய வழிநடத்துதலின் படி வேதவாக்கியங்களை கொண்டு தியானிப்போம். சத்திய ஆவி நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி செல்வார். **பெண்கள் பிரசங்கிக்கலாமா அல்லது கூடாதா என்ற சர்ச்சைக்குறிய உபதேசத்தை நாம் தியானிக்கும் முன் தேவன் ஒரு பெண்ணை இந்த உலகத்தில் எவ்வாறு பிரவேசிக்க செய்தார் என்று தியானிப்பது நமக்கு நலம் என கருதுகிறேன்.**

29. தேவன் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவர் அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார் (ஆதி 1:26,27) God said : let us make man in our image, after our likeness. இங்கு சாயல் என்ற தமிழ் பதத்திற்கு Image என்ற ஆங்கில வார்த்தையும், ரூபம் என்ற சொல்லுக்கு Likeness என்ற ஆங்கில பதமும் உபயோகிக்கபட்டுள்ளது. சாயல் என்றால் பிரதிபிம்பம் (Reflection) என்று பொருள். உதாரணமாக முகம் பார்க்கும் கண்ணாடியில் நம் முழு உருவத்தை பார்க்கிறோம். இது என்ன? நமது சாயலை கண்ணாடியில் பார்க்கிறோம். நாம் தேவனை ஒரு கண்ணாடியில் பார்த்தால் அவர் சாயல் எப்படியிருக்குமோ அதே சாயலில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான்.

30. ரூபம் என்றால் அதே போன்ற ஒன்று (Similarity) என்று பொருள். உதாரணமாக இந்த பொம்மையைப் போன்ற மற்றொரு பொம்மை. அல்லது இதை போன்று ஒற்றுமையுடைய மற்றொன்று. அதாவது தேவனுடைய சரிரத்தை போன்ற மற்றொரு சரிரத்தை உடையவனாக மனுஷன் உருவாக்கப்பட்டான். அதாவது தேவன் தம்முடைய சரிரத்தை பிரதிபலிக்கும் ஒரு சரிரத்தை உடையவனாக மனுஷனை உண்டாக்குவோம் என்றார்.

31. தேவன் ஆதி 1 : 26 - ல் மனுஷனை உண்டாக்குவோமாக (Let Us make man) என்றார். ஆனால் ஆதி 1:27 ல் மனுஷனை சிருஷ்டித்தார் (God created man) எனவும் காண்கிறோம். உண்டாக்கினார், சிருஷ்டித்தார் என்ற இரு சொற்களும் வித்தியாசமான பொருளை, அர்த்தத்தை உடையது. உண்டாக்கினார் என்பது ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்கினார் என்று பொருள்படும். ஒரு பொம்மையை போன்று மற்றொரு பொம்மையை உருவாக்குவதாகும். ஆனால் சிருஷ்டித்தார் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்குவதாகும். தேவன் பூமியானது புல்லையும் விதையும் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்கள் தங்கள்

விதையுடைய கனிகளை தங்கள் தங்கள் ஜாதியின் படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்க கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பாருங்கள் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை பிறப்பித்தல். அது சிருஷ்டிப்பு ஆகும்.

32. இப்பொழுது மனுஷன் தேவசாயலாகவும் ரூபத்தின் படியேயும் உண்டாக்கபட்டான். தேவசாயலாகவே சிருஷ்டிக்கப்பட்டான். அப்படியானல் தேவசாயல் தான் என்ன? தேவன் ஒரு ஆவி. யோ 4 : 24. தேவன் ஒரு மனுஷன் அல்ல எண். 23:19. தேவன் ஒரு ஆவிதான், ஆனால் அது நித்தியஆவி எபி 9:14. ஆதலால் இவர் அநாதி தேவன் என்று அழைக்கப்படுகிறார் உபா. 23 : 27. நித்தியத்திற்கு தொடக்கவும் முடிவும் கிடையாது. தேவன் ஒரு ஆவியாக, அதுவும் நித்திய ஆவியாக இருப்பதால் அவர் சர்வ வியாபியாக இருக்கவேண்டும் (சங் 139 : 7-10) பாருங்கள் வானங்களும், வானதி வானங்களும் இவரை கொள்ளாது. (2 நாளா 2 : 6, 1 இரா 8: 27) இவர் வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர் (எரே 23:24). ஆதலால் தேவன் அதரிசனமானவர் (கொலோ 1 : 15, யோபு 23 : 8 - 10) தேவன் அதரிசனமாக இருப்பதால் இவருக்கு ரூபம் எதுவும் கிடையாது. (உபா 4 : 12) ஆதலால் தேவனை ஒருவரும், ஒருபோதும் கண்டதில்லை, காணவும் முடியாது. (யோ 1 : 8, 1யோ 4 : 12) காரியம் இப்படி இருக்க தேவனுக்கு சாயல், ரூபம் எங்கிருந்து வந்தது?

33. இப்பொழுது சற்று நிதானமாக தியானியுங்கள். இந்த நித்திய ஆவி எதுவும் சிருஷ்டிக்கப்படுமுன், உருவாக்கப்படுமுன் **தேவன்** என்று அழைக்கப்படவில்லை. ஏனென்றால் **தேவன்** என்பதற்கு ஆராதனைக்குரியவர் என்று பொருள் ( God is an object of worship) இப்பொழுது நித்திய ஆவியை தேவன் என்று கூறி தொழுதுகொள்ள அவருக்கென்று ரூபம் எதுவுமில்லை. மேலும் அவரை தொழுதுகொள்ள எந்த விதமான சிருஷ்டிப்பும், படைப்பும் இல்லை. ஆதலால் நித்திய ஆவி தான் தேவன் என்று அழைக்கபடும் பொருட்டு எதுவும் தன்னால் சிருஷ்டிக்கப்படுமுன் தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதாவது நித்திய ஆவி, தன்னில் தானே ஒரு அவிக்குரிய மகிமையின் சரிரத்தை உடையவரானார். இப்பொழுது பாருங்கள் நித்திய ஆவி தான் தேவன் என்று அழைக்கபடும் பொருட்டு, மேலும் தான் சிருஷ்டிக்கபோகும் தன் சிருஷ்டிகள், படைப்புகள் தன்னை தொழுதுக்கொள்ள, தன்னை ஆராதிக்க, தன்னை பணிந்துக்கொள்ள தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதோடு மட்டுமல்ல இதன் மூலம் அவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானார். (கொலோ 1 : 15)

34. நித்திய ஆவி, தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு, தனக்கொன்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி **வார்த்தை / லோகாஸ் (Logos)** என்று அழைக்கப்பட்டார். மேலும் நித்திய ஆவி தன்னைதானே ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்திற்குள் கொண்டுவந்த வேளை **ஆதி - Beginning** என்று அழைக்கபட்டது. இதை தான் யோவான் ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாய் இருந்தது என்கிறான் (யோ 1 : 1) பாருங்கள் நித்திய ஆவியாகிய தேவன் **வார்த்தையில்** வெளிப்படுகிறார். இப்பொழுது இந்த வார்த்தை ஆவியும் ஜீவனுமாய் இருக்கிறது (யோ 6 : 63)

35. இந்த சம்பவத்தை இன்னும் சற்று கவனியுங்கள். என்னில் சிந்தனைகள், எண்ணங்கள் உண்டு. நான் பேசும்போது அது வார்த்தையாக வெளிவருகிறது. அதைப்போன்று தேவனுடைய சிந்தனைகள், எண்ணங்கள் ஆதிமுதல் அந்தம்வரை உள்ளவைகள் அனைத்தும் வெளியே வந்து ஒரு ஆவிக்குரிய சரீரமாகி அது **வார்த்தை** என அழைக்கப்படலாயிற்று. இப்பொழுது நித்திய ஆவி, **வார்த்தையாக** அறியப்படுகிறார். ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தையும் உடையவரானார். இது மாம்சமும், இரத்தமும் இல்லாத சரீரம். மேலும் நித்திய ஆவி தன்னில் தானே ஜீவன் உடையவராகி, ஒரு சரீரத்தை உடையவரானதால் **யேகோவா (கர்த்தர்)** என்று அழைக்கப்படலானர். யேகோவா என்றால் தன்னில் தானே ஜீவன் உள்ளவர் என்று பொருள். ஆக **வார்த்தைதான் யேகோவா** என நாம் அறிந்துகொள்ளலாம்.

36. அடுத்து கவனியுங்கள். தேவன் ஒருவரே எல்லாவற்றிலும் முதல்வராக இருக்கவேண்டும். அவருக்கு எதிலும் இரண்டாவது அல்லது முதலாவதற்கு அடுத்த ஸ்தானம் இருக்க முடியாது. ஆதலால் தேவன் தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி, சகல சிருஷ்டிகளுக்கும் முதற்பேறுமானார். ஆதலால் **தேவகுமாரன்** என்று அழைக்கப்படலானார். ஆக கவனியுங்கள் **வார்த்தையே தேவகுமாரன், தேவகுமாரனே வார்த்தை.** வார்த்தை நித்தியமானதால் தேவகுமாரன் நித்தியர். வார்த்தையே தேவன். தேவகுமாரனே தேவன். தேவகுமாரன் ஒரு சிருஷ்டி அல்ல. வார்த்தை ஒரு சிருஷ்டி அல்ல. ஆதலால் தான் யோவான் தேவகுமாரன் மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்கிறான் (1 யோ 5 : 20) Son of God is the true God and Eternal Life. தேவன் மட்டுமே தொழுகைக்குரியவர். தேவன் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்க செய்தபோது, தேவதூதர்கள் யாவரும் அவரை தொழுதுகொள்ள கடவர்கள் என்றார். எபி. 1 : 7. **தேவன் வார்த்தையில் தேவன் என அழைக்கபட்டார். தேவன், தேவகுமாரனாக தொழுகைக்குரியவரானார்.** இதைதான் பிதாவிடத்தில் இருந்ததும், நித்திய ஜீவனுமாய் இருக்கிற ஜீவன் வெளிப்பட்டு என 1 யோ 1 : 1-2 வசனங்களில் வாசிக்கிறோம். தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. பாருங்கள், குமாரனையுடையவன் ஜீவனை உடையவன். தேவகுமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் (1 யோ 5 : 11 - 12) ஆக **வார்த்தை, தேவகுமாரன், யோகோவா அனைத்தும் தேவனுடைய ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தையே குறிக்கிறது.** இதை குறித்து ஒரு பக்தன் பாடுகிறான் : **யேகோவா தேவனுக்கு 1000 நாமங்கள். நான்**

**எதை சொல்லி பாடுவேன்** என்கிறான்.

37. மேலும் தேவகுமாரன் **கிறிஸ்து** என்றும் அழைக்கப்படலானார். **மேசியா** என்ற சொல்லும் கிறிஸ்துவையே குறிக்கிறது. (தானி 9 : 25, யோ 4 : 25, மத் 16 : 16) தேவ ஆவியின் அபிஷேகம் பரிபூரணமாக தேவகுமாரன் மீது இருந்ததால் அவர் கிறிஸ்து என அழைக்கப்பட்டார். கிறிஸ்து என்றான் அபிஷேகம் பண்ணபட்டவர் என்று பொருள். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், தேவன் எந்த ஒரு பதவியையும் வேறுயாரிடத்திலும் கொடுக்கவில்லை. தேவனும் அவரே, தொண்டனும் அவரே. அக்காலத்தில் அவரவர் வகிக்கும் பதவிக்கொன்று அபிஷேகம் பண்ணப்பட்டனர். உதாரணமாக ஆசாரியர் (யாத் 29 : 7,21) இராஜா (2 இரா 9 : 6, 1 சாமு 10 : 1) தீர்க்கதரிசிகள் (1இரா 19 : 16) இவர்கள் யாவரும் அபிஷேகம் பண்ணபட்டனர். தேவனும் தன்னுடைய இரட்சிப்பின் திட்டத்தில் ஆசாரியர், இராஜா, தீர்க்கதரிசி போன்ற பதவிகளை வகிக்க வேண்டியதாயிற்று ஆதலால் அதற்கென்று அவரும் அபிஷேகம் பண்ணப்பட்டு **கிறிஸ்து** என அழைக்கப்படலானார்.

38. இப்பொழுது தேவகுமாரனாகிய கிறிஸ்து : தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாய் இருக்கிற ஆமென் என்பவர் என்று வெளி 3 : 14 ல் வாசிக்கிறோம். இதைக்கொண்டு சிலர் கிறிஸ்து / தேவகுமாரன் முதலில் சிருஷ்டிக்கபட்டவர். தேவனைவிட சற்று தாழ்மையான நிலையில் உள்ளவர் என்கிறார்கள். அது சாத்தியமாகாது. சிருஷ்டிக்கபட்டவர் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பது சாத்தியமாகாது, சத்தியமாகாது. இவர் தேவனுடைய சலக சிருஷ்டிப்பையும் தொடங்கினவர் (Beginner) அல்லது உண்டாக்கினவர் (Author) என்றே பொருள் படும்.

39. அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே கர்த்தர், நீர் வானங்களையும் வானாதி வானங்களையும் அவைகளுடைய சகல சேனைகளையும், பூமியும் அதினுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர். அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர். வானசேனைகள் உம்மை பணிந்துக்கொள்கிறது. (நெகே. 9 : 5-6) வானசேனைகள் யாரை பணிந்துக்கொண்டது? தேவகுமாரனை (எபி 1 : 6) அப்படியானால் இங்கு நீர் ஒருவரே கர்த்தர் என்பது யார்? **தேவன், தேவகுமாரனில் தொழுகைக்குரியவரானார். தேவனும், தேவகுமாரனும் இருவர் அல்ல. ஒரே நபரின் இருதோற்றங்கள் இந்த ஐக்கியத்தை மறுதலிகிறவனே அந்திகிறிஸ்து.** (1 யோ 2 : 23) திருத்துவ உபதேசமே அந்திக்கிறிஸ்துவினுடையதே.

40. அடுத்து தேவன் தொழுகைகுரியவராதலால் வானங்களையும் வானாதி வானங்களையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். அவர் பூமியில் இருந்தார். அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. ஆனால் உலகமோ அவரை அறியவில்லை (யோ 1 : 3,10) அன்று மட்டுமல்ல இன்றும் உலகம் அவரை அறியவில்லை. இன்றைய ஸ்தாபன சபைகள் அவரை மக்கள் அறிந்து கொள்ளாதபடிக்கு அவர்கள் கண்களை குருடாக்கி போட்டது. ஸ்பாதன சபைகள் யாவும் சாத்தானால் மக்கள் கண்களை குருடாக்க எடுத்து உபயோகப்படுத்தப்படும் பாத்திரங்களே. ஆதலால் நீங்கள் சார்ந்து இருக்கும் ஸ்தாபன சபைகளை விட்டு வெளியே வாருங்கள் என வெளி 18 : 1-4 அழைக்கிறது. இயேசு மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். அவரில் தேவத்துவம் மூன்றில் ஒன்றாக அல்ல, மாறாக பரிபூரணமாக இருக்கிறது. தேவத்துவத்தில் மூவர் என்ற திருத்துவ கொள்ளை பிசாசினுடையது. திருத்துவ கொள்கையை ஆதரிக்கும் ஸ்தாபன சபைகள் யாவும் பிசாசினுடையதே.

41. தேவனுடைய ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தின் சாயல் தான் தேவசாயல். இந்த சாயலில் தான் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். அதுவும் ஆணும் பெண்ணுமாக. தேவனுடைய இந்த சாயலைதான் மோசே காண விரும்பினான் (யாத் 33 : 19) அவர் கடந்து சென்ற போது மோசே அவர் பின் பாகத்தை கண்டான். (யாத் 33 : 23.) அது நம்முடைய பின் பாகத்தை போன்று இருந்தது. ஏனென்றால் தேவ சாயலில் தான் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். (ஆதி 1 : 27.)

42. இந்த பாழாய்போகிற டி.வி யில் ஒரு பாடலை கேட்டேன். அதிர்ச்சிக்குள்ளானேன். பாடுகிறவர் : நான் உம்மை அப்பா என்று அழைப்பேன், ஏனென்றால் நீர் என்னை உமது தோளின் மேல் சுமந்தீர். நான் உம்மை அம்மா என்று அழைப்பேன், எனென்றால் நீர் என்னை கருவில் சுமந்தீர் என பொருள்பட பாடினார். இதன் பின் பகுதி ஒரு தேவ தூஷனமாக தோன்றவில்லையா? நமது தேவன் அப்பா (Father) தான். ஆனால் அம்மா (Mother) அல்ல. அவர் தேவன் (God) தான். ஆனால் தேவி (Goddess) அல்ல. அவர் தேவ குமாரன் (Son of God) தான். ஆனால் தேவகுமாரத்தி (Daughter of God) அல்ல. அவர் தாவீதின் குமாரன் (Son of David) தான். மாறாக தாவீதின் குமாரத்தி (Daughter of David) அல்ல. அவர் மனுஷ குமாரன் (Son of Man) தான். மனுஷ குமாரத்தி (Daughter of Man) அல்ல.

43. ஆதாம் தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின் படியேயும் உண்டாக்கப்பட்டான். ஆதாம் மனுஷன். ஆதாம் மனுஷி அல்ல. ஆதலால் தேவனை ஸ்திரீயோடு இணைத்து ஆராதிக்க கூடாது, பாடகூடாது, பேசகூடாது. தேவனை அம்மா என்று ஒருவர் அழைப்பாரானால் அவர் ஒரு பிசாசே. ஏனென்றால் சகல தாறுமாறுகளுக்கும் அவனே ஊற்று. டி.வி.யில் வரும் பாடல்களில் அநேகம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது. தேவனை அம்மா என்று அழைத்த பரிசுத்தவான்கள் வேதவாக்கியங்களில் எங்காவது காணப்படுகிறார்களா? இல்லவே இல்லை.

44. இப்பொழுது தேவசாயலாக ஆணும் பெண்ணுமாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கபட்ட மனுஷன், தன் சுபாவத்தை வெளிப்படுத்த மாம்ச சரீரத்தை உடையவனாகி, ஜீவாத்துமா ஆனான். தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமா ஆனான் (ஆதி 2 : 7) ஆக ஆவிக்குரிய சரீரத்திலிருந்த மனுஷனுக்கு (ஆதி 1 : 26, 27) தேவன் பூமிக்குரிய மேனியை கொடுத்து (ஜென்ம சரீரம் / மாம்ச சரீரம்), தம்முடைய ஜீவசுவாசத்தை (Breath of Life) அவனுடைய நாசிலே ஊதினார். அவன் ஜீவாத்துமா ஆனான். அதாவது ஆதி 1 : 27 ல் ஆவிக்குரிய சரீரத்திலிருந்த மனுஷன் ஆதி 2 : 27 ல் மாம்ச சரீரத்திற்கு வந்தான். முந்திய சரீரம் மாம்சமும், இரத்தமும் இல்லாத சரீரம். பிந்தின சரீரம் மாம்சமும், இரத்தமும் உடைய சரீரம். இப்பொழுது மனுஷன் ஆவி ஆத்துமா சரீரத்தை உடையவனானான். ஆவிக்குரிய சரீரம் தேவனுடைய சாயலானது. மாம்ச சரீரம் தேவனுடைய ரூபத்தின்படியானது.

45. இப்பொழுது தேவசாயலாகிய மனுஷனுடைய ஆவிக்குரிய மேனி (ஆவிக்குரிய சரீரம்.) தேவரூபம் மனுஷனுடைய பூமிக்குரிய மேனி (மாம்ச சரீரம்) ஆவிக்குரிய சரீரம் உண்டு, ஜென்ம சரீரம் உண்டு. 1கொரி 15 : 44) ஜென்ம சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்படும்.ஆவிக்குரிய சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும் (1 கொரி 15 : 42)

46. இங்கு ஒரு காரியத்தை நாம் காண வேண்டும். ஆதாமின் காரியத்தில் அவன் ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டான் (ஆதி 1 : 27). மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். ஆதி 2 : 7 ஆதாமினுடைய காரியத்தில் ஆவிக்குரிய சரீரம் முந்தினது. மாம்ச சரீரம் பிந்தினது. இயேசுவின் காரியத்திலேயும் அப்படியே. ஆனால் நம்முடைய காரியத்தில் நாம் முதலாவது மாம்ச சரீரத்தில் பிறக்கிறோம். இனி ஆவிக்குரிய சரீரத்தை பெற்றுக்கொள்ள போகிறோம். அதாவது மாம்ச சரீரம் முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. இப்பொழுது நாம் மண்ணானவனுடைய சாயலை அணிந்திருக்கிறோம். இனி வானவருடைய சாயலைஅணியப்போகிறோம். (1கொரி 15 : 49, எபே 4 : 24)

47. நாம் ஆவிக்குரிய சரீரத்தை பைபாய் செய்து மாம்ச சரீரத்திற்குள் வந்தோம். எதற்காக? நாம் முதலில் மாம்சத்தில் சோதிக்கபட்டவேண்டியதாய் இருக்கிறது. நாம் இந்த மாம்ச சரீர அழிவுக்கு பின்பு தான் ஆவிக்குரிய சரீரத்திற்கு செல்ல இருக்கிறோம். நாம் இப்பொழுது மாம்ச சரீரத்தில் இருக்கிறோம். ஆவிக்குரிய சரீரம் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது. ( 2கொரி 5 : 1)

48. தேவன் மனுஷனை ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார் (ஆதி 1 : 27) மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் அவனுடைய மனவாட்டி இருந்தாள். பின் தேவன் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசில் ஊத அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2 : 7) மனுஷன் தேவசாயலாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கபட்டு, பின் மாம்ச சரீரத்தில் உருவாக்கபட்டான். ஆனால் மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண், பெண் பாகங்களில் பெண் பாகம் மட்டும் இன்னும் ஆதாமுக்குள் இருந்தது. ஆண் பாகம் மட்டும் வெளியே கொண்டுவர பட்டு தன் மாம்ச சரீரத்தை பெற்றுக்கொண்டது. ஆனால் பெண் பாகம் வெளியே வந்து தன் மாம்ச சரீரத்தை பெறவில்லை. பெண்பாகம் எப்பொழுது வெளியே வந்து தன் மாம்ச சரீரத்தை பெற்றாள்? தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரை அடைந்தான். கர்த்தர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார் (ஆதி 2 : 21, 22) இப்பொழுது தேவசாயலாக சிருஷ்டிக்கபட்ட மனுஷனுக்குள் இருந்த ஆண், பெண் பாகம் மாம்ச சரீரத்திற்குள் வெளியே கொண்டு வரப்பட்டது. பெண் பாகம் மனுஷனிடத்திலிருந்து எடுக்கபட்டபடியினால் மனுஷி என அழைக்கப்பட்டாள் (ஆதி 2 : 23)

49. தேவனால் சிருஷ்டிக்கபட்ட சகல ஜீவஜந்துக்கள் (மிருகம், மச்சம், பறவை, ஊர்வன முதலியவைகள் அனைத்தும்) ஆண், பெண் தனித்தனியாக மூல சிருஷ்டிப்பில் (Original Creation) இருந்தன. ஆனால் மானிட வர்கத்தில் மாத்திரம் அப்படி அல்ல. ஆண் மூல சிருஷ்டிப்பில் தேவ சாயலாக இருந்தான். அவனுக்குள் பெண் இருந்தாள். ஒரு நாள்ஆண் தன் மாம்ச சரீரத்திற்கு வந்தான். ஆனால் பெண் அவனுடைய சரீரத்திலிருந்து எடுக்கபட்டாள். அவள் மூல சிருஷ்டிப்பில் இல்லை. மாறாக ஒரு பக்க சிருஷ்டிப்பாக (By Product) இருந்தாள்.

50. இது குறித்து தான் பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது புருஷனாவன் தேவசாயலாயும் மகிமையுமாய் இருக்கிறான். ஸ்திரீயானவாள் புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவன் அல்ல. மாறாக ஸ்திரீயே புருஷனிலிருநது தோன்றினவள். மேலும் புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கபட்டவன் அல்ல. மாறாக ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கபட்டவள் என்கிறான். (1 கொரி 11 : 7-9)

51. ஸ்திரீயானவள் ஏன் ஒரு பக்க சிருஷ்டிப்பாக (By Product) உருவாக்கபட்டாள்? பாருங்கள், ஆதாம் தேவனால் உண்டானவன் (லூக் 3 : 38) ஆதலால் சாத்தான் அவனிடம் நெருங்கமுடியாது. ஏனென்றால் தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. ஆதலால் அவன் சாத்தானால் சோதிக்கப்பட்டு அவிசுவாசத்தினாலே பாவத்திற்குள் விழக்கூடாதிருந்தது. மானிடவர்க்கம் பாவத்தில் விழுவதற்கென்றே

ஸ்திரீயானவள் மனிதனிலிருந்து பிரித்தெடுக்கபட்டாள். இது தேவனுடைய இரட்சகர் / மீட்பர் போன்ற தன்மைகள் வெளிப்பட காரணமாயிருந்தது. பாருங்கள் வியாதியஸ்தன் இல்லாவிட்டால் மருத்துவன் எதற்கு? ஒரு மருத்துவன் இருக்கிறான் என்றால் அங்கு வியாதியஸ்தர்கள் இருகிறார்கள் என்றே அர்த்தம். அந்த திருஷ்டாந்தத்தின்படி தேவனுடைய இரட்சகர் / மீட்பர் என்ற தன்மைகள் வெளிப்பட வேண்டுமாயின் அங்கு ஒன்று பாவத்தில் விழவேண்டும். அப்போது தான் அவருடைய இரட்சகர் / மீட்பர் என்ற தன்மை வெளிப்படும்.

52. மேலும் ஒரு உதாரணம் தருகிறேன். நான் பிறக்கும் போது/இந்த உலகத்தில் பிரவேசிக்கும் போது எனக்குள் தகப்பன் என்ற ஒரு தன்மை இருந்தது. ஆதலால் தான் நான் வளர்ந்தேன், பருவமடைந்தேன், திருமணம் செய்தேன், பிள்ளைகளை பெற்றேன். என்னில் இருந்த தகப்பன் என்ற தன்னை வெளியானது. அதே போன்றுதான் தேவனுடைய இரட்சகர் / மீட்பர் தன்மை வெளிப்பட ஏதோ ஒன்று பாவத்தில் விழவேண்டும். ஆதாம் தேவனுடைய குமாரன், பாவத்தில் விழமுடியாது. ஆதலால் தான் தேவனுடைய சாயலாக அல்ல மாறாக மனுஷ சாயலாக ஏவாள் உருவாக்கப்பட்டாள். அவள் ஒரு பக்க சிருஷ்டிப்பாக உருவாக்கப்பட்டாள். அவளில் காணப்பட்ட பெலவீனத்தை சாத்தான் சாதகமாக்கி கொண்டான். சர்ப்பத்தின் வழியாக சாத்தான் ஏவாளை வஞ்சித்தான். ஆம், சர்ப்பத்தின் வாயிலாக சாத்தான் ஏவாளை கற்பழித்தான். சர்ப்பமானது சபிக்கப்படுமுன் ஒரு காட்டு ஜீவனாக இருந்தது. மனுஷனோடு நெருங்கிய பண்புகளை, சுபாவங்களை உடையதாக இருந்தது. அந்த இணைப்பில்தான் காயின் பிறந்தான். காயீன் பொல்லாங்கானால் உண்டானவன். (1 யோ. 3 : 12) ஆதாம் தேவனுடையகுமாரன். அப்படியிருக்க காயீனை, ஆதாமுடைய குமாரன் என்று எப்படி கூறமுடியும்? காயீன் பொல்லாங்கானால் உண்டானவன் என்றால் ஆதாம் பொல்லாங்கன். ஆம் பிரியமானவர்களே காயீன் சர்ப்பத்தின் வித்தாக இருப்பதால் அவன் பொல்லாங்கானால் உண்டானவன் என்று வேதம் கூறுகிறது. ஆதாம் தேவகுமாரன். காயீன் சாத்தானுடைய குமாரன்.

**53. இப்பொழுது நமது பிரச்சனை என்ன? தேவசாயலாக இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புருஷனுடன் (ஆண்) புருஷனுடைய மகிமையாய் இருக்கும் பெண் பிரசங்கிக்கலாமா? இதில் ஸ்தாபன சபைகளின் தீர்ப்பு : புருஷர்களுடன் சேர்ந்து ஸ்தரீகளும் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம். ஆனால் வேதவாக்கியங்களின் தீர்ப்பு : ஸ்திரீ தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க கூடாது.**

54. **ஸ்திரீகள் பிரசங்கிக்கலாம் என்பவர்கள் எடுத்துக்காட்டும் வேதவாக்கியங்கள் :**

1. ஆண்டவர் வசனம் தந்தார். அதை பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி. (சங் 68 : 11) இதை கொண்டு பெண்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்று கூற முடியாது. ஆண்டவர் வசனம் தந்தது உண்மைதான். அதை பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டமும் மிகுதிதான். ஆனால் வசனத்தை யாருக்கு தந்தார்? பாருங்கள், கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே. (1 பேதுரு 1 : 25) ஆனால் சுவிசேஷமாய் அறிவிக்கபட்டு வருகிற வசனத்தை கையாள கர்த்தர் பெண்களை ஏற்படுத்தினதாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரம் கிடையாது. இயேசுவினுடைய அப்போஸ்தலர்களில் 12 பேர்களில் மற்றும் அவர் கிராமம் கிராமமாக சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்க தெரிந்துக்கொண்ட 70 பேரில் ஒரு பெண் இருந்தாள் என எடுத்துக்காட்ட முடியாது. (மத். 10 : 2-4, லூக் 10 : 1)

2. இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும், தீமோத்தேயும், பிலிப்பி பட்டிணத்தில் கிறிஸ்து இயேசுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதும்போது : எனக்கு பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்கு சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்கிறேன். அன்றியும் என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாய் இருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடும் கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதியிருக்கிறது (பிலி. 1 : 1, 4 : 1-3) Help those women (Euodia and Syntyche) who laboured with me in the gospel, with Clement also, and with other my fellow workers. இங்கு சுவிசேஷ ஊழியத்தில் எயோதியாளும், சிந்திகேயாளும் பவுல் தன்னோடு கூட பிரயாசப்பட்டதை கூறுகிறான். பவுலின் ஊழியத்தில் இவர்கள் பணி பெண்களாக இருந்தார்கள். இயேசுவுடன் அநேக ஸ்திரீகள் அவருடன் பல இடங்களுக்கு சென்று அவருடைய ஊழியத்தில் ஒத்தாசையாக இருந்தார்கள் (லூக் 8 : 1-3) அந்த பெண்கள் யாவரும் அவருடன் சேர்ந்து மனந்திரும்புங்கள், பரலோக இராஜியம் சமிபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கவில்லை. அப்போஸ்தலர்களும் தங்கள் மனைவிகளை ஊழியத்தின் பாதையில் கூட்டிக்கொண்டு சென்றனர். எதற்கு? சுவிசேஷத்தை அவர்களுடன் பிரசங்கிக்கவா? இல்லை. ஊழியத்தின் பாதையில் அவர்களுக்கு ஒத்தாசையாய் இருக்க, உதவியாய் இருக்க (அப் 9 : 5). ஆதலால் பிலி 4 : 1-3 வசனங்கள் பெண்கள் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதை உறுதிப்படுத்துவதாக இல்லை.

3. சிலர் சமாரிய ஸ்திரீ ஒரு சுவிசேஷ ஊழியக்காரி என கூறி யோ 4 : 28, 29,39 வசனங்களை குறிப்பிடுகிறார்கள். இவர்கள் எடுத்துகாட்டும் வசனம் 39 என்ன கூறுகிறது? சமாரிய ஸ்திரீ தான் செய்த எல்லாவற்றையும் இயேசு எனக்கு சொன்னார் என்று சாட்சி கூறினாள். அவளுடைய வார்த்தையின் நிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் இயேசு மேல் விசுவாசம் உள்ளவர்கள் ஆனார்கள். இது சமாரிய

ஸ்திரீயின் சாட்சியே அன்றி, அவள் அங்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே இல்லை. அவள் தன் சாட்சியின் மூலம் அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினாள். சாட்சிக்கும், சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் பெண்கள் பிரசங்கிக்கலாம் என உளறுகிறார்கள். இங்கு பின்பு நடந்தது என்ன? 40-42 வசனங்களை வாசியுங்கள். உன் சொல்லின் நிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாகவே கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள். அது தான் காரியம். இயேசு தான் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். சமாரிய ஸ்திரீ சாட்சிக்கூறினாள். ஆகவே சமாரிய ஸ்திரீயைக்கொண்டு பெண்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்பது வேதவாக்கியங்களுக்கு முரண்பாடானது.

4. அடுத்து லூக் 8 : 2, 3 வசனங்களை குறிப்பிடுகிறார்கள். அதுவும் தவறு. இங்கு இயேசு பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும், நீக்கி குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் எனப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும் இயேசுவுடனே அவருடைய ஊழியத்தின் பாதையில் அவருக்கு ஒத்தாசையாக இருந்தார்களேயன்றி அவர்கள் இயேசுவுடன் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் என கூற முடியாது.

5. இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தியை முதலில் பிரகடனம் செய்தது பெண்கள் (மத் 28 : 8) அதிலும் விசேஷமாக மகதலேனா மரியாள் (யோ 20 : 1 17,18). அவள் அப்போஸ்தலர்களிடம் சென்று இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை அறிவித்தாள். அவள் அங்கு ஒரு சுவிசேஷ செய்தியை அப்போஸ்தலர்களுக்கு பிரசங்கிகவில்லை. மாறாக கர்த்தர் அவளிடம் நீ என சகோதரரிடத்திற்கு போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கு என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறி போகிறேன் என்று அவர்களுக்கு சொல் என்றார். இயேசு தாம் உயிர்த்தெழுந்த செய்தியை தம்முடைய சீஷர்களுக்கு அறிவிக்க மகதலேனா மரியாளை அனுப்புகிறார். அவளை ஒரு சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஒரு சுவிசேஷ செய்தியோடு அனுப்பவில்லை. மகதலேனா மரியாள் மற்றவர்களை காட்டிலும் இயேசுவை அதிகம் நேசித்தாள். ஆதலால் அவள், அவர் உயிர்தெழுதலுக்கு முதல் சாட்சியானாள். ஆதலால் மகதலேனா மரியாள் ஒரு சுவிசேஷ பிரசங்கி என்பது பிசாசு.

6. அடுத்து மாற்கு 16 : 15 யை கொண்டு இயேசு நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டபோது அந்த கட்டளை ஆண், பெண், நிறம், இனம், பண்பாடு என்ற வேறுபாடில்லாமல் ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்பட்டது என்கிறார்கள். இது வேதவாக்கியங்களை புரட்டும் சாத்தானின் ஒரு உபதேசம். நீங்கள் மாற் 16 : 14 ல் இருந்து வாசியுங்கள். இந்த கட்டளை யாருக்கு கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்கு புரியும். இயேசு தம்முடைய சீஷர்கள் 11 பேருடன் (யுதாஸ் தவிர மற்றவர்கள்) போஜனபந்தியிருக்கையில், இந்த கட்டளையை அவர்களுக்கு கொடுத்தார். இதில் பெண்கள் இல்லை. இதில் பெண்கள் இருந்திருப்பார்களானால் இவர்கள் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இயேசு தம்முடைய 11 சீஷர்களுக்கும் தான் கட்டளையிட்டார். ஆதலால் இவர்களது உபதேசம் நம்முடைய சத்துருவினுடையதே.

7. இயேசு அப் 1 : 8 ல் சொன்னதாவது பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். இந்த வாக்குத்தத்தம் பெண்களுக்கும் உண்டு. இங்கு ஸ்திரீகளும் இருந்தார்கள் என்கிறார்கள். இங்கு நீங்கள் வேதவாக்கியங்களை நன்கு தியானிப்பீர்கள் என்றால் இதுவும் வேற்றுமையான உபதேசமே. அப் 1 : 3 லிருந்து 15 வரை வாசியுங்கள். கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகிறார் (வா. 3) அப்போஸ்தலர்களில் பெண்கள் யாரும் கிடையாது. மேலும் வா. 4 ல் அப்போஸ்தலர்கள் கூடி வந்திருக்கும் போது இயேசு அவர்களுடன் இடைப்படுகிறார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி 8 ம் வசனத்தை கூறுகிறார். அங்கு பெண்கள் கிடையவே கிடையாது. மேலும் இதை உறுதிப்படுத்த அப் 1 : 11 யை வாசியுங்கள். அங்கு கலிலேயராகிய மனுஷரே என்று சொல்லப்பட்டிருப்பதால் அங்கு பெணகளுக்கு இடமே இல்லை. Ye men of Galilee. ஆதலால் அப் 1 : 8 கூறப்பட்ட இடத்தில் பெண்கள் இருந்தார்கள் என்பது ஒரு கள்ள உபதேசம்.

8. அடுத்து ஆக்கில்லாவும் அவனுடைய மனைவி பிரிஸ்க்கில்லாலும் அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிகத்திட்டமாய் விவரித்து காண்பித்தார்கள் என்று அப் 18 : 24 - 28 ல் கூறப்பட்டிருக்கிறது. பிரிஸ்க்கில்லாள் ஒரு வல்லமையான பிரசங்கியாக இருந்தாள் என்கிறார்கள். இதுவும் ஆதி.3 சர்ப்பத்தின் தந்திரமே. வேதவாக்கியங்களை நன்கு கவனியுங்கள். அலெக்சாந்திரியா பட்டிணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும், வேதவாக்கியங்களில் வல்லவனுமான அப்பொல்லோ ஒரு யுதன். எபேசு பட்டிணத்திற்கு வந்திருந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாய் இருந்து, ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்தவைகளை திட்டமாய் போதகம் பண்ணிக்கொண்டுவந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய் பேச தொடங்கினபோது, ஆக்கில்லாவும், பிரிஸ்க்கில்லாவும் அவன் பேசுகிறதை கேட்டு, அவனை சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அவனுக்கு அதிக திட்டமாய் விவரித்து காண்பித்தார்கள். இங்கு ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் சேர்ந்தோ அல்லது தனிதனியாகவோ சுவிசேஷத்தை அப்பொல்லோவிற்கு பிரசங்கித்தார்கள் என கூறப்படவில்லை. மாறாக இந்த கணவனும் மனைவியும்

அப்பொல்லோவோடு உட்கார்ந்து தேவனுடைய மார்க்கத்தை அவனுக்கு விவரித்து காண்பித்தார்கள் என்றே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அப்பொல்லோ தேவாலயத்தில் பிரசங்கம் பண்ணினான். இந்த கணவனும் மனைவியும் அப்பொல்லோவின் பிரசங்கத்தை தேவாலயத்தில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பின்பு அவனை கூட்டிக்கொண்டுவந்து அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை விவரித்து கூறினார்கள் என்றே கூறப்பட்டுள்ளது. When Aquila and Priscilla had heard they took him unto them , and expounded (அதாவது explained) unto him, the way of God more perfectly. ஆக இந்த சம்பவத்தை கொண்டும் பெண்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்று கூறமுடியாது. **ஆண்களும், பெண்களும் உட்கார்ந்து தேவனுடைய மார்க்கத்தை குறித்து ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வதை பிரசங்கம் என கூறமுடியாது.**

9. அடுத்து பெபேயாள் (ரோ 16 : 1) இவள் சபைக்கு ஊழியக்காரி. ஒரு பிரசங்கி அல்ல Our sister, who is a servant of the church. அவள் சபைக்கு ஊழியக்காரியாக இருந்தாளேயன்றி சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஒரு பிரசங்கியாக அல்ல. இவள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மிக்க ஆதரவாக, உதவியாளாக இருந்தாள் (She hath been a helper of many) இங்கு Helper என்ற வார்த்தைக்கு Succourer என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது இதற்கு ஒத்தாசை செய்பவர், உதவி செய்பவர், உதவியாளர் என்றே பொருள். ஆதலால் பெபேயாள் ஒரு பிரசங்கி என்பதும் பிசாசிற்கு செவி கொடுப்பதாகும்.

10. பாருங்கள் பெண்கள் சபையில் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்கடுத்த எந்த விதமான உத்தியோகவும் வகிக்கமுடியாது. வேதவாக்கியம் கீழ்கண்டவாறு இது குறித்து கூறுகிறது. பாருங்கள் கண்கணியானவன் ஒரே மனைவியை உடையவனாக இருக்கவேண்டும் (1 தீமோ 3 : 2) , தீத் 1 : 6 இதிலிருந்து என்ன தெரிகிறது? பெண்கள் அந்த பதவியை வகிக்கமுடியாது. ஏனென்றால் கண்காணி ஒரே மனைவியை உடைய புருஷனாக அல்லது ஒரே புருஷனைஉடைய ஸ்திரியாகவோ இருக்க வேண்டும் என்று கூறபடவில்லை. மாறாக ஒரே மனைவியை உடைய புருஷன் என்றே கூறப்பட்டுள்ளது. கண்காணி ஒரு பதவி. அந்த பதவிக்குறியவன் ஒரு மூப்பன். ஒரு வாலிபன் அல்ல. இந்நாட்களில் சபைகளில் வாலிபர்கள் பாஸ்டர்களாக, மூப்பர்களாக இருப்பது தேவவார்த்தைக்கு புறம்பானது. ஆதலால் அப்படிபட்ட ஊழியங்களை விட்டு நாம் விலகியிருக்கவேண்டும். அடுத்து உதவிக்காரர்கள் கூட ஒரே மனைவியை உடைய புருஷன் (1 தீமோ 3 : 12) என்றே கூறப்பட்டுள்ளது. ஆதலால் பெண்கள் சபையில் ஒரு உதவிக்காரியாக (டீக்கன்) கூட இருக்கமுடியாது. மாறாக பெபேயாளைபோன்று சபைக்கு அடுத்த பணிகளை செய்யும் ஒரு ஊழியக்காரியாக இருக்கலாம். அதாவது லோக்கல் சபைக்கடுத்த பணிகளை கவனிக்கும் ஒரு ஊழியக்காரி. பொதுவாக இந்த பணியை திருநெல்வேலி / தூத்துக்குடி மாவட்டத்தில் **கோயில்குட்டி** என்று அழைப்பார்கள். ஆக சுவிசேஷத்தை பிரக்கிக்கும் சபைக்கடுத்த ஊழியங்களிலோ அல்லது ஐந்து வகை ஊழியங்களிலோ பெண்கள் பங்கு கொள்ள முடியவே முடியாது. பெண் பிரசங்கிகள், பெண் பிஷப்புகள், பெண் பாஸ்டர்கள் இதெல்லாம் கள்ள சபைகளிலேயன்றி, தேவனுடைய சபையில் இவர்களுக்கு இடம் கிடையாது. கள்ள சபைகள் என்று நான் எதை கூறுகிறேன் என்று உங்களுக்கு புரிகிறதா? நான் ஸ்தாபன சபைகளையே கூறுகிறேன். C.S.I., T.P.M., A.G., E.C.I., Luthern, Baptist, C.G., போன்ற சபைகளை கூறுகிறேன், இவைகள் யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் கள்ள சபைகளே.

11. எண் 30 அதிகாரத்தை கொண்டு, ஒரு பெண்ணின் தகப்பனோ அல்லது புருஷனோ அவளை கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கென பொருத்தனை செய்ய முடியாது. கூடாது. தேவனுடைய அழைப்பு ஊழியத்திற்கு தேவை. நாமாகவே அதற்கு நம்மை ஒப்புக்கொடுக்க முடியாது. பாருங்கள் பர்னபாவையும், பவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப் 13 : 2) மேலும் பவுலுக்கடுத்த காரியங்களை பாருங்கள். அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய் போய் துரோவாவுக்கு வந்தார்கள். அங்கு இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று : அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தார் ஒருவர் வந்து நின்று, நீர் மக்கொதோனியவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது. அந்த தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் படி கர்த்தர் என்னை அழைத்தார் என்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு உடனே மக்கெதோனியாவிற்கு புறபட்டு போக பிரயத்தனம் பண்ணினோம் (அப் 16 : 8-10) இங்கு ஊழிய அழைப்பு தரிசனத்தின் மூலமாக இருந்தது.
மேலும் பவுல் தன்னுடைய ஊழிய அழைப்பு பற்றி கூறும் போது : இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கபட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல் என்கிறான். (ரோ 1 : 1) தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும். (1 கொரி 1 : 1) ஆம், பிரியமானவர்களே ஊழியத்திற்கு தேவனுடைய அழைப்பு தேவை. ஒருவனுடைய பொருத்தனை தேவையில்லை. ஆதலால் சிலர் எங்களுடைய பெண்ணை ஊழியத்திற்கொன்று பொருந்தனை செய்துள்ளோம் என்பது வேதவாக்கியத்திற்கு முரணானது. அதை தேவன் அங்கீகரிப்பதில்லை. ஆதலால் தான் தேவனுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் ஒருவன் உறுதியாக்க ஜாக்கிரதை உள்ளவனாய் இருக்கவேண்டுமென 2பேதுரு 1:10 ல் வாசிக்கிறோம். முடிவாக ஒருவன் தன் தாயின் வயிற்றில் இருந்தது முதல், அவனை பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அவனை ஊழியத்திற்கு அழைக்கிறவர் தேவன். ஒருவனுடைய பொருத்தனை, ஊழிய அழைப்பு ஆகாது (கலா 1 : 15 ).

12 சிலர் தங்கள் மகள், மனைவியை கர்த்தரின் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளோம். ஆதலால் அவர்கள் ஊழியம் செய்கிறார்கள். அதாவது சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணுகிறார்கள் என்கிறார்கள். இதெல்லாம் வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத ஒன்று. தேவன் நம்மை தெரிந்துக்கொண்டாரே யன்றி நாம் அவரை தெரிந்துக்கொள்ளவில்லை (யோ. 15: 16). ஆதலால் வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு ஸ்திரீ தேவனுடைய சபையில், பிரசங்கபீடத்தின் மேல் / பின் நின்று தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க, அதோடு மட்டுமல்ல தன் கைகளை வானத்திற்கு நேராக உயர்த்தி / விரித்து மக்களை ஆசீர்வதிக்க தகுதியற்றவள் / அருகதையற்றவள்.

13. இதற்கு பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் : அப்பொழுது உங்கள் குமாரரும் (Sons) உங்கள் குமாரத்திகளும் (Daughters) தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் : உங்கள் மூப்பர் (Old Men) சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் (Young Men) தரிசனங்களையும் காண்பார்கள். ஊழயக்காரர் (Servants) மேலும், ஊழியக்காரிகள் (Handmaids) மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல் 2 : 28, 29) இது பரிசுத்த ஆவியை குறித்த ஒரு வாக்குத்தத்தம் (The Promise of the Holy Spirit) இது பெந்தெகொஸ்தே நாளான்று நிறைவேறியது (அப் 2 : 16 ). இங்கு நீங்கள் நன்கு கவனித்தீர்கள் என்றால் இங்கு ஊழியக்காரர் (Servants), ஊழியக்காரிகள் (Handmaids), சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஊழியகாரர்களையும், ஊழியக்காரிகளையும் குறித்து கூறப்படவில்லை. மாறாக வீட்டில் பணிபுரியம் வேலையாளையும், வேலைக்காரிகளையும் குறித்து கூறப்பட்டுள்ளது. ஒரு Handmaid என்பது சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஒரு பெண் அல்ல. ஆதலால் ஊழியக்காரிகள் மீதும் (வீட்டுவேலை செய்யும் வேலைக்காரிகள் மீது) பரிசுத்த ஆவி ஊற்றப்படுவது கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க என்பது ஒரு கபடமான உபதேசம். நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்பதன் நிறைவேறுதலாகும்.

14. அடுத்து இவர்கள் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளை பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோ 14 : 12) என்று இயேசு கூறியிருக்கிறார். ஆதலால் பெண்களும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்கிறார்கள். என்னை விசுவாசிக்கிறவன் என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொருந்தும். ஆதலால் ஆண்களைப்போன்று பெண்களும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்கிறார்கள். நீங்கள் நன்கு கவனித்தீர்களானால் இயேசு தம்முடைய அற்புத கிரியைகளை கூறுகிறார். இதை சுவிசேஷத்திற்கடுத்த காரியங்களில் கொண்டு பொருத்துவது லௌகிக ஞானம்.

15. அடுத்து பெந்தெகொஸ்தே நாள் அன்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களில் பெண்களும் உண்டு. (அப் 2 : 4). எதற்காக அவர்களுக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது? பெலனடைந்து சாட்சியாய் இருக்க (அப் 1 : 8) சாட்சிகளாய் இருப்பீர்கள் என்ற சொல் போதனை, கற்றுக்கொடுத்தல், செய்து காட்டுதல், அற்புதங்களை செய்தல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்த சாட்சிப்போன்ற காரியங்களை தனக்குள் கொண்டதாகும். ஆதலால் பெண்களும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்கிறார்கள். ஆண்கள் மட்டும் வெளியே சென்று வல்லமையோடு சுவிசேஷத்தை பிரசங்கிக்க பெண்கள் ஏன் அமைதலாக இருக்கவேண்டும் என்கிறார்கள். பெண்களும் பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள். அது உண்மைதான். ஆனாலும் அவர்கள் எல்லாவற்றிலும் அடக்கமாயிருந்து, அமைதலோடு அனைத்தையும் கற்றுக்கொண்டு, உபதேசம் பண்ணாதிருக்கவேண்டும், அவள் அமைதலாயிருக்கவேண்டும். அதுவே அவளுக்கடுத்த பிரமானம். என்னத்திலாலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கபட்டான். பின் ஏவாள் உருவாக்கபட்டாள். ஆதாம் வஞ்சிக்கபடவில்லை. ஸ்திரீ வஞ்சிக்கபட்டு மீறுதலுக்குட்பட்டாள். தியானியுங்கள் 1 தீமோ 2 : 11-14. மேலும் கவனியுங்கள், நாம் ஒரே சரீரத்தில் அநேக அவயவங்களாய் இருக்கிறோம். எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் அதாவது பணி கிடையாது. தொழில் மற்றும் பணி அவயவங்களுக்கு அவயவம் வித்தியாசப்படுகிறது. பாருங்கள் ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுவதிலும், பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் பகிர்ந்து கொடுக்கிறதிலும் தரித்திருக்க வேண்டும் (ரோ 12 : 4 - 8). பெண்களுக்கு கர்த்தர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணியை கொடுக்காத போது அவள் அதில் உரிமை கொண்டாட கூடாது. பாருங்கள் ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றவன் தான். ஆனாலும் அவன் தன் பணியாகிய புத்தி சொல்லுகிறதில் நிலைத்திருக்கவேண்டும். அவன் அடுத்தவனது பணிக்குள் அதாவது மற்றொருவனுடைய தொழிலுக்குள் தன் மூக்கை நுழைக்ககூடாது. ஒரு பாஸ்டர் ஒரு சுவிசேஷகனுடைய பணிக்குள் மூக்கை நுழைக்கக்கூடாது. அதே போன்றுதான் பெண்களும். ஏனென்றால் அவயவங்கள் அநேகம். ஒவ்வொன்றிற்கும் தனிதனி வித்தியாசமான பணிகள் உண்டு. பெண்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணி கிடையாது.

16. இங்கு மற்றொரு உபதேசமும் உண்டு. அதையும் சற்று தியானிப்போம் அதாவது கிறிஸ்துவை பொறுத்தமட்டில் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் தகுதியின் அடிப்படையில் எந்த விதமான வேறுபாடுமில்லை. ஏனென்றால் யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும், சுயாதீனனென்றும் இல்லை. ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள் என பவுல் கலா 3 : 28 ல் கூறுவதை குறிப்பிட்டு, சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் ஆண், பெண் இரு பாலாருக்கும் பங்கு உண்டு. அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறார்கள் என்கிறார்கள். இங்கு பவுல் கூறுவது என்ன? இப்பிரபஞ்சத்தில் நீங்கள் யூதர்கள் எனவும்,

கிரேக்கர்கள் எனவும், இந்தியர் எனவும், ஜப்பானியர் எனவும், அமெரிக்கர் எனவும் அவரவர்கள் பிறந்ததேசத்தை பொறுத்து அழைக்கப்படுகிறார்கள். பிரிந்திருக்கிறார்கள். மேலும் முதலாளி எனவும், வேலைக்காரன் எனவும், அதிகாரிகள் எனவும் வேலையைகொண்டு அழைக்கப்படுகிறார்கள். மேலும் மனுக்குல சிருஷ்டிப்பில் ஆண், பெண் என்றும் அழைக்கப்படுகிறோம். ஆனால் கிறிஸ்துவின் சரீரத்தில் இவை அனைத்தும் ஒன்றும் கிடையாது. இங்கு ஆணென்றும், பெண்ணென்றும் கிடையாது. சரீரம் கிறிஸ்துவின் மணவாட்டியாக கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக இருக்கிறது. ஆண், பெண் இருபாலரும் கிறிஸ்துவின் மனவாட்டியாக, ஒரே சரீரமாக அழைக்கப்படுகிறார்கள். இதை தான் பவுல் எழுதுகிறான். ஆதலால் பவுல் ஆணெனறும், பெண்ணென்றும் இல்லையென எழுதுகிறான், ஆதலால் ஆண், பெண் இருபாலரும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம் என்பதும் பிசாசின் வேற்றுமையான உபதேசங்களில் ஒன்றாகும்.

### தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பெண்கள் பிரசங்கிக்கூடாது. ஏன்?

55. **கிறிஸ்து தேவனுடைய சாயலாக இருக்கிறார். புருஷன் தேவசாயலாக சிருஷ்டிக்கபட்டான். தேவசாயலாயிருக்கிற கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தேவசாயலாக சிருஷ்டிக்கபட்ட மனுஷனே பிரசங்கிக்க முடியும்.** ஒரு மனுஷன் தேவசாயலை எப்போது தரித்துக்கொள்கிறான்? அவன் மனந்திரும்பி தன் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றப்பின் தான் தேவனுடைய சாயலை தரித்துக்கொள்கிறான். இப்பொழுது அவன் பூமியிலிருந்தாலும் உன்னதத்திற்குரியவன். உன்னத்திற்குரிய ஆசீர்வாதங்களை உடையவன். (எபே 1 : 3) பரிசுத்த ஆவியை பெற்றதன் மூலம் அவன் தன் முந்தின நடத்தைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளினாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை கலைந்துபோட்டு, உள்ளத்திலே புதிதான ஆவியுடையவனாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறான் (எபே 4 : 22-24) தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறான் (கொலோ 3 : 10) பரலோகத்திலிருந்து அனுப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் (1 பேது 1 : 12 ) இன்று கல்லூரிகளில் பெற்று வந்த லௌகிக ஞானத்தை கொண்டு பிரசங்கிக்கிறார்கள் பலர் மற்றும் சிலர் பைபிளை கைகளில் எடுத்துக்கொண்டு தங்கள் மனம் போன போக்கில் எதை எதையோ பிரசங்கிக்கிறார்கள். ஆக இவர்கள் அனைவரும் மொத்தமாக சேர்ந்து மக்களை குழப்புகிறார்கள்.

56. ஆக, தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஒருவன் மனந்திரும்பி, பாவ மன்னிப்பிற்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது அவன் பரிசுத்த ஆவியை பெருகிறான். இப்பொழுது முந்தின நடத்தைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளினாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை கலைந்துபோட்டு, உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவனாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கபட்ட (ஆதி 1 : 26,27) புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறான். இப்பொழுதுதான் இவன் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியும். மற்றொருவனாலும் கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, தேவசாயலாய் சிருஷ்டிக்கபட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளாத ஒருவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது. ஐயா ஒரு காலும் அவனால் கூடாது. பிரசங்கிப்பானாகில் அவன் கள்ள கபடமுள்ள வேலையாளே.

57. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க D.Th., B.Th., M.Th., B.D., D.D., Ph.D., Dr., போன்ற படிப்புகள்/பட்டங்கள் எதுவும் தேவையில்லை, ஐயா தேவையில்லவே இல்லை. ஏனென்றால் இப்பட்டங்கள் யாவும் பிசாசிற்குரியது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க, சபையை வழிநடத்த **ஐயர், பாதிரியார்,** போன்ற பதவிகள் வேதவாக்கியங்களில் எங்கே? இவைகள் யாவும் அந்திக்கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் உங்கள் ஸ்தாபனசபைகளில் மட்டும் காணப்படும். இவைகள் கர்த்தர் வெறுக்கும் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள். (வெளி 2 : 6)

58. **ஐயர்** என்ற வார்த்தையை நான் இங்கு எழுதும்போது எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்தில் வந்தது. இது பல ஆண்டுகளுக்கு முன்று நான் திருவைகுண்டத்தில் இருந்த நாட்களில் நடந்த ஒரு சம்பவம். திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் ஒரு பாதிரியார் தன் மருமகளை கொலை செய்து விட்டார் என பத்திரிகைகளில் செய்தி வந்த காலம் அது. அந்நாட்களில் எனக்கு அறிமுகமான ஒரு அட்வோகேட் பாளை சிறைச்சாலைக்கு சில கைதிகளை பார்க்க சென்றாராம். அப்பொழுது அவர்களை பார்க்க சென்ற கைதிகளிடம் பாருங்கள் உங்கள் **ஐயர்** தன் மருமகளை இப்படி கொலை செய்து விட்டதாக செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதே இது உண்மையாக இருக்குமா என்று அவர்களிடம் கேட்டாராம். அப்பொழுது அவர்கள் ஏக மனதாக **ஐயர்** அப்படி செய்திருக்க முடியாது. அவர் நிச்சயமாக கொலை செய்திருக்கமாட்டார் என ஆனித்தரமாக அடித்து பேசினார்களாம். முடிவில் அந்த கைதிகள் அந்த அட்வோகேட்டிடம் ஐயா, நீங்கள் **ஐயர், ஐயர்** என்று குறிப்பிடுகிறீர்களே அந்த **ஐயர்** யார் என்று விபரம் கேட்க, அவர் விபரம் கூற, அப்பொழுது அந்த கைதிகள் ஐயா நீங்கள் சொல்லுகிற **ஐயர்** நிச்சயமாக செய்வார். நாங்களோ **பூநூல் போட்ட ஐயரை** நினைத்தே உங்களிடம் இதுவரை பேசினோம். நிச்சயமாக **பூநூல் போட்ட ஐயர்** கொலை செய்யமாட்டார். ஆனால் நீங்கள் சொன்ன

**ஐயரோ** துணிந்து கொலை செய்வார் என்றார்களாம். கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே உங்கள் மத்தியில் உள்ள ஐயர் மதிப்பு மக்கள் மத்தியில் எந்த அளவிற்கு உள்ளது என்பதை கவனித்தீர்களா?. இது ஒரு உண்மையான சம்பவம். திருவைகுண்டத்தில் உள்ள சம்பந்தபட்ட அட்வோகேட் என்னிடம் கூறியது.

59. **கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஒருவன் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கபட்ட புதிய மனுஷனை தரித்திருக்க வேண்டும். அது ஒன்றே தகுதி. தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கபட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ள ஒருவன் நாம் முன்பு தியானித்தபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்** ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். **இதுதான் அஸ்திபாரம்.** இன்றைக்கு தங்கள் கரங்களில் பரிசுத்த வேதாகமத்தை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே. ஸ்தாபன சபை ஊழியர்கள் இதில் அடங்குவார்கள். திருத்துவ உபதேசத்தில் உள்ளவர்கள் திருத்துவத்தையே பிரசங்கிப்பார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது. ஏனென்றால் அவர்களுக்கும் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆனாலும் அவர்கள் பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் யார் என்பதை தேவனுடைய மனுஷர்கள் மாத்திரமே அதாவது பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மாத்திரமே அறிந்துக்கொள்ள முடியும். பரிசுத்த அவியை பெற்றவர்கள் மாத்திரரே தேவத்துவத்தில் திருத்துவ உபதேசம் பிசாசு என்பதை அறிவார்கள். நம்முடைய அநாதி தேவன் முக்கோணங்களில் உள்ள மூன்று தேவர்களைக்கொண்ட கூட்டு அல்ல. மாறாக அவர் ஒன்றான மெய்த்தேவன். அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

60. **பாருங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் (1கொரி 15 : 1-4) என்று விசுவாசிக்கும் ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானத்தின் மூலம் பாவமன்னிப்பை பெறவேண்டும். பாருங்கள் அவரை (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே) பாவமன்னிப்பை பெறுவான். (அப் 10 : 43 ) அவராலேயன்றி (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல்) வேறொருநாமம் கட்டளையிடப்பட்வில்லை (அப் 4 : 12) இதனால் தான் சத்திய ஆவியானவர், பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களை பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமமாகிய (மத் 28 : 19) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (அப் 2 : 38) நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்க வழிநடத்தினார். அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். பெந்தெகொஸ்தே நாளன்று 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்படி ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களை, மத் 28 : 19-20 வசனங்களை உரைத்த கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப் 2 : 38,41,47) அப்போஸ்தலர்கள் கொடுத்த ஞானஸ்நானத்தை கர்த்தர் அங்கீகரித்தார். உங்கள் ஸ்தாபன சபைகள் கொடுக்கும் ஞானஸ்நானத்தை சாத்தான் அங்கீகரிக்கிறான். இது தான் காரியம்.**

61. பாருங்கள் இவர்களுக்கு குருடர்கள் பார்வையடைய, சப்பானிகள் நடக்க, குஷ்டரோகிகள் சுத்தமாக, கொடிய வியாதியிலிருந்து பூரண சுகம்பெற, நோய்களிலிருந்து சுகம் பெற, பொல்லாத ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற, செவிடர்கள் கேட்ட, மரித்தோர் எழுந்தரிக்க, கடன் தொல்லை தீர இவ்வாறாக இப்பிரபஞ்சத்திற்குரிய நன்மைகளுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமம் தேவை. ஆனால் தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கு (அப் 4 : 12 ) இவர்களுக்கு கார்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமம் (அப் 2 : 38) தேவையில்லை. தங்கள் வாழக்கையில் செய்த அக்கிரமங்களுக்கு, மீறுதல்களுக்கு மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தேவையில்லை. பாருங்கள் இவர்கள் இம்மைக்குரிய நம்மைகளுக்காக இயேசு கிறிஸ்துவை பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பரிதவிக்கப்படத்தக்கவர்கள் என 1 கொரி 15 : 19 கூறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் இவர்களுக்கு எட்டிக்காயாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானத்தை மறுதலிக்கும் ஸ்தாபனசபைகள் யாவும் பிசாசினுடையதே. அவைகளின் ஊழியக்காரர்கள் யாவரும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே. பிசாசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்களே. பிசாசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து செயல்படுகிறவர்களே, பணி செய்பவர்களே, ஊழியம் செய்பவர்களே. ஏனென்றால் திருத்துவம் பிசாசின் உபதேசம். **நம்முடைய தேவனோ இருக்கிறவராகவே இருக்கிறேன் என்ற இருக்கிறேன் என்பவர்** ( யாத் 3 : 14). ஆம், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்** (எபி 13 : 8. )

62. **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்** ஞானஸ்நானம் **எடுப்பதற்கு மாறாக வேறெந்த வகையிலும் ஞானஸ்நானம் எடுப்பவர்களை பிசாசு தன் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுபவர்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். நீங்கள் யாருடைய சபையில் அவயவமாய் இருக்கிறீர்கள் என்பதை இன்றே முடிவெடுத்து கொள்ளுங்கள்.**

63. சிலர் நாங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எங்கள் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணபட்டார், உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறோம் என்கிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அவரோடே கூட மரித்து அடக்கம் பண்ணபட்டு உயிர்த்தெழ தயங்குகிறார்கள். மறுக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் தங்கள் இருதயத்தில் உணர்ந்து குணப்படாதபடிக்கு அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. தங்கள் காதுகளினால் மந்தமாய் கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என வேதவாக்கியம் இவர்களை குறித்து கூறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவது இவர்களுக்கு வேம்பமர இலைகளை அரைத்து குடிப்பது போல் கசப்பாக இருக்கிறது.

64. மேலும் இந்த சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைத்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறோம் என்கிறார்கள். அப்படியானால் அவர்கள் யார்? சாத்தானுடைய ஊழியக்காரர்களே. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே. ஸ்தாபன சபை ஊழியகாரர்கள் யாவரும் இந்த ரகத்தை சேர்த்தவர்களே. அவர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. ஐயா, இல்லை.

65. பெண்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியைப்பெற்று, கிறிஸ்துவை தரித்துக்கொண்டது , புதிய மனுஷனை தரித்துக்கொண்டது உண்மை தான். அதை யாரும் மறுக்கமுடியாது. ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது. நன்மை தீமை அறியத்தக்க விருச்சத்தின் கனியை புசிக்க கூடாது. இது தேவகட்டளை (ஆதி 2 : 17) ஆனால் சாத்தானால் ஏவாள் வஞ்சிக்கபட்டாள். விலக்கபட்ட கனியை பரித்து புசித்தாள். அதோடு நின்றுவிடாது தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். ஸ்திரீயானவள் வஞ்சிக்கபட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ 2 : 14) ஆனால் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை ( 1 தீமோ 2 : 4) அவன் தன் சரீரத்தின் பாகமாகிய தன் மனைவியாகிய ஏவாளுக்கு செவிகொடுத்தான். அவளுடைய மீறுதலை தன் மீது ஏற்றுக்கொண்டான். ஏவாள் **மீறுதலுக்குட்பட்டதன் விளைவு - புருஷன் அவள் மீது ஆளுகை செலுத்த வேண்டியவனான. அவள் மீது அதிகாரம் உடையவனானான் (ஆதி 3 : 16) ர்ந எாயடட சரடந ழஎநச வாநந. அப்படியானால் அதற்கு முன் அப்படியிருந்ததில்லை என அர்த்தம். ஏவாளுடைய மீறுதலுக்கு பின்புதான் அப்படியாயிற்று. ஸ்திரீ புருஷனுடைய ஆதிகத்திற்குட்பட்டதால். புருஷன் ஸ்திரீக்கு தலையானான் (1கொரி 11 : 3). இப்பொழுது ஸ்திரீ புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படித்திருக்க வேண்டும். (எபே 5 : 24, தீத் 2 : 5, 1பேதுரு 3 : 1)** அவள் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் மாத்திரமே தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படித்திருப்பாள் மற்றபடி அவன் ஆளுகைக்குட்பட்டிருக்கமாட்டாள். ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்குட்பட்டவள். ஒரு மனுஷன் தன்னுடைய மனைவியை ஆளுகை செய்யவேண்டும் என வேதம் கூறுகிறது. ஆனால் இப்பிரபஞ்சத்தின் தேவன் அதை மாற்றிப்போட்டான். ஸ்திரீ மனுஷர்கள் மீது ஆளுகை செலுத்துகிறாள். புருஷர்களே நீங்கள்தான் உங்கள் மனைவிக்காக பதில் சொல்லப்போகிறீர்கள். அவள் உங்களுக்காக தேவன் முன் பதில் கூறிப்போவதில்லை. ஏனெனில் நீங்கள் தான் அவளுக்கு தலை என்பதை மறந்துவிடாதீர்கள். ஆதலால் பணத்திற்காக பெண்களின் காலடியில் விழாதீர்கள்.

66. நான் மே 20 ந் தேதி டெக்கான் குரோனிக்கல் என்ற ஆங்கில பத்திரிகையில் **சுப்ரீம் கோர்ட் புருஷர்களுக்கு :மனைவிக்கு செவிக்கொடுங்கள். (SC to men : Listen to Wife)** எந்த தலைப்பில் நியூ டெல்லி, மே 19 நாளிட்டப்பட்ட ஒரு செய்தியை வாசித்தேன். அதில் தீபக்குமார் அவரது மனைவி மனிஷா விவாகரத்து வழக்கில் கனம் நீதிபதிகள் மார்க்கண்டேயா கட்சு, தீபக்வர்மா புருஷர்களுக்கு கொடுத்த ஆலோசனைகளை படித்தேன். அதாவது : புருஷர்கள் ஒரு அமைதியான ஒரு இல்லறவாழ்க்கை வாழ விரும்பினால் அவர்கள் தங்கள் மனைவி எதை சொன்னாலும் அதை செய்யவேண்டும் (If you want to buy matrimonial peace just do whatever your wife says!) மற்றபடி அது உங்களை தொல்லைக்குள் / மனகஷ்டத்திற்குள் கொண்டுவரும். (Listen to whatever your wife says, otherwise it could land you in trouble) ஏனெனில் நீ அவளுக்கு செவிகொடுக்காவிட்டால், அதன் விளைவுக்கு நீங்கள் கஷ்டப்படவேண்டயதாயிருக்கும் ( Because if you don't listen to her you will suffer the consequences) இது விவேகமுள்ள ஆலோசனையோ அல்லது இல்லையே, மனைவி கூறும் யோசனைகளை புருஷர்கள் ஏற்றுகொள்ளவேண்டும். உங்கள் மனைவி உங்கள் முகத்தை அந்த பக்கம் திருப்புங்கள் என்றால் அதை செய்யவேண்டும். இந்த பக்கம் திருப்புங்கள் என்று கூறினாலும் அதை செய்யவேண்டும். செய்யாவிட்டால் நீங்கள் தொல்லைகளை சந்திக்கவேண்டும் (A husband has to accept the suggestion of a wife irrespective of the fact whether it is sensible or not. If your wife asks you to put your face that side, put it that side. If she says, put it this side, then put it this side. otherwise you will face trouble. )

67. நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் இப்படிபட்ட ஆலோசனைகள் மனதிற்கு சஞ்சலமாய் இருக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை கீழ்கண்டவாறு கூறுகிறது : மனைவிகளே, கர்த்தருக்கு கீழ்ப்படிக்கிறது போல, உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறது போல புருஷனும் மனைவிக்கு தலையாய் இருக்கிறான். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிக்கிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக்காரியத்திலேயும் (in everything) கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபே 5 : 22 - 24.) பாருங்கள் எந்தக்காரியத்திலேயும் மனைவி புருஷனுக்கு கீழ்ப்படித்திருக்க வேண்டும் ஏனென்றால் அவளுக்கு அவன் தலை. ஆக, மதிப்பிற்குரிய நீதிபதிகளின் ஆலோசனை தேவனுடைய வார்த்தைக்கு / கட்டளைக்கு /

பிரமாணத்திற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. இப்படிபட்ட ஆலோசனைகளுக்கு கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள் செவிக்கொடுக்க வேண்டியதில்லை. புருஷன் மீது மனைவி அதிகாரம் செலுத்த கூடாது, முடியாது. அவன் அவளை பார்த்து உன் தலையை இந்த பக்கம் திருப்பு என்றாலும், அந்த பக்கம் திருப்பு என்றாலும் அவள் அவனுக்கு கீழ்ப்படிய வேண்டியவளாயிருக்கிறாள். மாறாக அவன் அவளுக்கு அல்ல.

68. மனைவிகளே புருஷர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தை நாம் எஸ்தர் புத்தகத்தில் முதல் அதி. கடைசி பகுதியில் வாசிக்கலாம். மதிப்பிற்குரிய நீதிபதிகள் தங்கள் குடும்பவாழ்க்கையின் அனுபவங்களை நமக்கு ஆலோசனைகளாக கூறுகிறார்கள் என கருதுகிறேன். கிறிஸ்தவ பெண்களுக்கு இவர்களின் ஆலோசனையைவிட தேவனுடைய வார்த்தை கூறுவதுதான் முக்கியம். பாருங்கள் தேவனுடைய வார்த்தை கீழ்கண்டவாறு கூறுகிறது. பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த (அதாவது தேவனிடத்தில் விசுவாசமுள்ள உண்மையான கிறிஸ்தவ பெண்கள்) பரிசுத்த ஸ்திரீகளும் (ஆம், கற்புள்ள, பண்புள்ள, நீதி நியாயத்தை கடைபிடிக்கும் பெண்கள்) தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் **(புருஷர்களுக்கு கீழ்ப்படிவதே ஸ்திரீகளின் அலங்கரிப்பு)** உதாரணமாக அந்தப்படியே சாராள் ஆபிரகாமை **ஆண்டவன்** என்று சொல்லி அவனுக்கு கீழ்ப்படித்திருந்தாள். நீங்களும் அவ்வாறாகவே கீழ்ப்படிந்திருங்கள். புருஷன்மீது ஆதிக்கம் செலுத்தாதீர்கள். அவன் உங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற ஒரு சிந்தனையை உங்கள் உள்ளத்தில் கொண்டு வராதீர்கள். அது பாவம். இது குறித்து நீங்கள் 1 பேதுரு 3 : 5, 6 வசனங்களை தியானியுங்கள்.

69. சிலர் கணவன் மனைவி இருவருமே ஒருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்கின்றனர். இதற்கு ஆதாரமாக தெய்வபயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் எபே 5 : 21 வசனத்தை குறிப்பிடுகின்றனர். பாருங்கள் இதை பவுலைக்கொண்டு எழுத வைத்த பரிசுத்த ஆவி அதற்கு கீழே என்ன எழுதுகிறார் என்பதை கவனியுங்கள். மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படியுங்கள் (வா.22) புருஷன் மனைவிக்கு தலை (வா. 23) **மேலும் கவனியுங்கள் சபை கிறிஸ்துக்கு கீழ்ப்படிக்கிறது போல மனைவிகள் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (வா. 24) புருஷன் மனைவிக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்ன திருஷ்டாந்தத்தை இங்கு நிலைநாட்டினால் பின் கிறிஸ்துவும் சபைக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பொருள்படும்.** அப்படிதானே! பாருங்கள் சாத்தான் எந்த அளவிற்கு வேதவாக்கியங்களை புரட்டுகிறான் என்று. இதே தந்திரத்தை தானே ஆதியிலும் அவன் ஏவாளிடத்தில் செயல்படுத்தினான், வெற்றியையும் கண்டான்.

70. தெய்வபயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் என்றால், அதன் அர்த்தம் என்ன? ஒருவர் தன் வாழ்க்கையில் இந்த உலகத்தில் எந்தெந்த வகையில் யார் யாருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமோ அவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதே. உதாரணமாக பாருங்கள் என் வீட்டில் என் மனைவி எனக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். என் பிள்ளைகள் எனக்கும் எனது மனைவிக்கும் அதாவது அவர்களது பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். நான் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். மேலும் பிள்ளைகள் தங்கள் பள்ளிகளுக்கு செல்லும் போது அங்கு அவர்கள் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் பணிகளுக்கு செல்லும் போது அங்கு தங்களுக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இவ்வாறாக ஒருவன் தன் வாழ்க்கையில் யார் யாருக்கு எந்தெந்த வகையில் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமோ அவர்களுக்கு தெய்வபயத்தோடே கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதே எபே 5 : 21 ன் பொருளாகும். ஆதலால் இந்த நவீன போதனை : பவுல் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருக்க வேண்டும் என எபே 5 : 21 ல் எழுதுகிறான் என்ற உபதேசத்தின் இருப்பிடம் சாத்தானின் இருப்பிடம். நீங்கள் இந்த உபதேசத்திற்கு செவிகொடுத்து தேவ கோபாக்கினைக்கு ஆளாகாதிர்கள்.

71. ஸ்திரீ எல்லாவற்றிலும் அடக்கம் உள்ளவளாய் இருந்து அமைதலோடே கற்றுக்கொள்ள வேண்டும். அவள் அமைதியாய் இருக்கவேண்டும். (1 தீமோ 2 : 11) உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதியாய் இருக்கவேண்டும். (1 தீமோ 2 : 12) இவள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால் அதுவும் தன் வீட்டிலே தன் புருஷனிடத்தில் விசாரித்து கற்றுக்கொள்ளவேண்டும். (1 கொரி 14 : 25)

72. இப்பொழுது கவனியுங்கள் ஸ்திரீயானவள் தான் அறியாத எந்த ஒரு காரியத்தையும் தன் புருஷனித்தில் விசாரித்து, கேட்டு, கற்றுக்கொள்ள வேண்டும். காரியம் இப்படியிருக்க, ஸ்திரீ தன் புருஷனுடைய ஆளுகைக்குட்பட்டிருக்க, பின் அவன் மீது எப்படி அதிகாரம் செலுத்தமுடியும்? அவனுக்கு உபதேசம் செய்ய முடியும்? சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்போது இதை செய், அதை செய்யாதே போன்ற அதிகாரங்களை பிறப்பிக்க வேண்டியதுள்ளதே (1 கொரி 9 : 18) I abuse not my power in the gospel என ஆங்கிலத்தில் வாசிக்கிறோம். ஏனென்றால் இராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு (பிர 8 : 4) Where the word of a king is there is power. இது வல்லமையையும் அதிகாரத்தையும் குறிக்கும். தேவனுடைய வார்த்தை இருக்கும் இடத்தில் வல்லமையும் அதிகாரமும் உண்டு. பாருங்கள் இயேசு அதிகாரம் உடையவராய் அவர்களுக்கு போதித்தார். (மத் 7 : 28.) எங்கு போதனை உண்டோ அங்கு அதிகாரம் உண்டு. பாருங்கள் பவுல், தீத்துக்கு என்ன எழுதிகிறான்? இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள்.

ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடம் கொடுக்காதே. (தீத். 2 : 15) மேலும் பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது : சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணி, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துக்கொண்டு புத்தி சொல்லு (2 தீமோ 4 :2). **ஒரு பெண்ணுக்கு ஆண் தலையாக இருப்பதால் இந்த அதிகார்த்தை அவள் அவன் மீது செலுத்த முடியாது. புருஷர்களை அவள் கன்டனம் பண்ண முடியாது, கடிந்துக்கொள்ள முடியாது. அவனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவள் அவனுக்கு புத்தி சொல்ல முடியாது. பிரசங்கத்தில் புத்தி சொல்லுதலுக்கும் இடம் உண்டு. (லூக் 3 : 18)**

73. மேலும் தேவனுடைய வசனத்தை கொண்டவர்கள் தேவர்கள். (யோ . 10 : 35) ஒரு ஸ்திரீ தேவவசனத்தை பெற்றுக்கொண்டு உபதேசிப்பவளானால், பிரசங்கிப்பவளானால் அவள் ஒரு தேவி (Goddess) எனப்படுவாள். ஆனால் தேவன் ஒரு ஆண். தேவன் பெண் அல்ல. ஆக ஒரு பெண் தேவனானால் அது தேவ தூஷனம். **ஆதலால் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு புருஷனே தேவசாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிசங்கிக்க முடியும். அவனே தேவனுடைய வசனத்தை பெற்று அதை பிரசங்கிப்பவன்.** மனுஷடை மகிமைாாய் இருக்கிற பெண்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க கூடவே கூடாது.

74. கொரிந்து பட்டிணத்தில் தியானாள் ஒரு பெரிய பெண் தெய்வமாக விளங்கினாள். அவள் ஒரு ரோம பெண் தெய்வம். அவள் உலகம் முழுவதும் தொழுதுகொள்ளப்பட்டாள். அவள் ஒரு பெண்ணாக இந்த காரணத்தால் அவளுடைய ஊழியக்காரிகள் பெண்களாக இருந்தார்கள். அவர்கள் பவுலின் உபதேசத்தை கேட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது அவர்கள் பவுலுக்கு நிருபங்கள் எழுதி தங்கள் ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதை குறித்து தான் பவுல் தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது? ஒருவன் தன்னை தீர்க்கதரிசி என்றாவது, ஆவியை பெற்றவன் என்றாவது எண்ணினால் நான் உங்களுக்கு எழுதுகிறவைகளை கர்த்தருடைய கற்பனை என்று அவன் ஏற்றுக்கொள்ளகடவன். ஒருவன் அறியாதவனாய் இருந்தால் அறியாதவனாய் இருக்கட்டும். (1கொரி 14 : 26 - 38) சபைக்கு எழுதப்பட்ட இந்த நிருபத்தின் வரலாற்றை நீங்கள் எடுத்துக்கொண்டால், இந்த ஸ்திரீகள் தியானாளுக்கு பூசாரிகளாக இருந்தது போலவே தொடர்ந்து அந்த ஊழியத்தை தேவனுடைய சபையில் செய்ய விரும்பினர். அதை பவுல் ஏற்றுக்கொள்ளவில்லை.

75. பாருங்கள் தேவன் ஜீவசுவாசமுள்ள சலக சிருஷ்டிப்புகளையும் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆனால் மானிடவர்க்கத்தில் மட்டும் அவர் ஒரு பெண்ணை தம்முடைய மூல சிருஷ்டிப்புக்குள் (Original Creation) கொண்டு வரைவில்லை. அவள் புருஷனின் விலா எலும்பிலிருந்து உருவாக்கபட்டாள். Women is not in the original creation. But she is a byproduct. காரியம் இப்படியிருக்க அவள் எந்த வித்திலும் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தபட்ட 5 வகை ஊழியத்தில் ஒரு பெண், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாமல் இருக்க முடியாது. பாருங்கள் வேதவாக்கியங்கள் எல்லாம் உபதேசத்திற்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பித்தலுக்கும் பிரியோஜனமுள்ளதாய் இருக்கிறது (2 தீமோ 3 : 16,17) இந்நிலையில் எப்படி ஒரு பெண் ஆண்கள் மீது அதிகாரம், பிரசங்கத்தின் வேலையில் செலுத்த முடியாமல் இருக்க முடியும்? ஆனாலும் அவள் பிரசங்கிக்கிறாள், போதகம் பண்ணுகிறாள், உபதேசிக்கிறாள், அதிகாரம் செலுத்துகிறாள். ஏனென்றால் அவள் ஒரு முரண்பாட்டின் விதை. சாத்தானின் வித்து.

**76. புருஷன் தேவனுடைய சாயலாகவும், மகிமையுமாய் இருக்கிறான். ஆனால் ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள். இக்காரணம் கொண்டு ஒரு ஸ்திரீ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதினால் உண்டாகும் அதிகாரத்தை புருஷன் மீது செலுத்த முடியாது (1 கொரி 11 : 7, ஆதி 5 : 1, யாக் 3 : 9)**

**77. ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றினவள். அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகமே. காரியம் இப்படியிருக்க அவள் புருஷன் மீது அதிகாரம் செலுத்த முடியாது. அவனுக்கு உபதேசம் பண்ண முடியாது. அவனுக்கு போதிக்க முடியாது. அவள் அவனிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவளாய் இருக்கிறாள் (1 கொரி 11 : 8, ஆதி 2 : 21, 22).**

**78. ஸ்திரீ புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள் (1 கொரி 11 : 9) எதற்காக? கர்த்தர் ஏற்ற துணையை (Help Meet) அவனுக்காக உண்டாக்குவேன் என்றார். (ஆதி 2 : 11) பாருங்கள் அவர் அவனுக்கு ஒத்தாசையாக இருக்க, அவனுக்கு உதவியாக இருக்க அவளை சிருஷ்டித்தார். அவன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல அவனுக்கு ஒரு துணை தேவைபட்டது. அவனுக்கு துணையாக, உதவியாக இருக்க வேண்டியவள் அவன் மீது அதிகாரம் செலுத்தலாமா? முடியாது.**

79. பாருங்கள் சில பெண்கள் ஆண்களை விட நன்றாக பிரசங்கிக்கலாம். அது உண்மைதான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் கவனியுங்கள் என்னால் 120 கி.மீ வேகத்தில் வாகனத்தை ஓட்டமுடியும். ஆனால் அது என்னால் கூடாது. ஏனென்றால் நாட்டு சட்டத்தின் கீழ் என் வேகம் 60 கி.மீ தான். நான் அதற்கு கீழ்ப்படிய வேண்டும். அவ்வண்ணமாகவே சில பெண்கள் ஆண்களை விட நன்கு பிரசங்கிக்கலாம். அதன் பொருட்டு

அவர்கள் தங்களை பிரசங்கிகளாக மாற்றிக்கொள்ள கூடாது. அவள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். அது அவள் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தடைசெய்கிறது. ஆனால் ஸ்தாபன சபைகள் அதை ஆதரிக்கிறது. உங்கள் மத்தியிலுள்ள ஸ்தாபன சபைகள் யாவும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதி என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

80. அடுத்து ஸ்திரீக்கு புருஷன் தலை (1 கொரி 11 : 3). தலைக்கு அவள் எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இராஜாவாகிய ஆகாஸ்வேருக்கு கீழ்ப்படியாத இராஜஸ்திரீ வஸ்தியின் நிலையை நீங்கள் நன்கு அறிவீர்கள் (எஸ்தர் 1 அதி). இராஜாவுக்கு கீழ்படியாததால் அவள் தள்ளப்பட்டாள். தலைக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டியவள் தலை மீது அதிகாரம் செலுத்த முடியாது. சபை, கிறிஸ்து மீது அதிகாரம் செலுத்த முடியாது. அவ்வண்ணமாகவே ஸ்திரீயும் புருஷன் மீது அதிகாரம் செலுத்த முடியாது. பெண் பிரசங்கிகள் பிசாசின் கரத்திலுள்ள அவன் வேலையாட்களே. சாத்தான் தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததை போன்று நம் பெண்களையும் வஞ்சித்து வருகிறான். ஆதலால் தான் இவர்கள் தங்கள் கரங்களில் பரிசுத்தவேதாகமத்தை எடுத்துக்கொண்டு சோம்பலுள்ளவர்களாய் விண்அலுவல்காரிகளாய், வீடு வீடாய் திரிகிறார்கள், தகாதவைகளை பேசி வருகிறார்கள். விரோதியானவன் நிந்திக்க இடம் கொடுத்து தேவவசனம் தூஷிக்கப்படத்தக்க ஒரு புருஷருக்கு மனைவியாயிராமல் சில வேளைகளில் சிலர் மற்றொருவனுக்கு ஸ்டெப்பினியாகவும் இருந்து வருகிறார்கள். நீங்கள் திருமணம் செய்து வீட்டில் தரித்திருந்து, பிள்ளைகளை பெற்று, அவர்களை கர்த்தருக்கேற்ற போதனையிலும், சிட்சையிலும் வளர்த்து, அந்நியர்களை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களை கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிகள் செய்து, சகலவிதமான நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து ஆக்கில்லாவிற்கு ஒரு பிரிஸ்கில்லாவை போன்று நிலைத்திருங்கள். உங்கள் இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இருக்கட்டும். இதுவே உங்கள் பணி.

கிறிஸ்து அரசர் ஆலய வழக்கில் கோர்ட்டு தீர்ப்பு:

**கிறிஸ்தவ ஆலய பீடத்தில் பெண்கள் பைபிள் படிக்க தடை**

**"பெண்கள், ஆண்களுக்கு நிகரானவர்கள் அல்ல"**

நாகர்கோவில், ஜன. 20–

"பெண்கள், ஆண்களுக்கு நிகரானவர்கள் அல்ல. எனவே கிறிஸ்தவ ஆலய பீடத்தில் பெண்கள் பைபிள் படிக்க கூடாது" என்று நாகர்கோவில் கிறிஸ்துநகர் ஆலய வழக்கில் நாகர்கோவில் கோர்ட்டு தீர்ப்பு கூறியது.

இந்த வழக்கு பற்றிய விவரம் வருமாறு:—

பெண்கள் உரிமை கோரி மனு

நாகர்கோவில் கிறிஸ்துநகர் கிறிஸ்து அரசர் ஆலய வழிபாடு, திருவிழா மற்றும் ஆலய நிர்வாகங்களில் பெண்களுக்கு உரிமை கேட்டு நாகர்கோவில் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் ஆக்னஸ் குளோரி, மரகதவள்ளி ஆகியோர் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்தனர்.

இதை எதிர்த்து குருசுமிக்கேல், தோப்பியாஸ், ஜார்ஜ், யூஜின்கிராஸ், கில்பர்ட், சார்லஸ் ஆகியோர் எதிர் மேல்முறையீடு செய்தனர்.

இந்த வழக்கு நாகர்கோவில் முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி டி.என். கலைவாணி முன்னிலையில விசாரணைக்கு வந்தது.

அவர் அளித்த தீர்ப்பு விவரம் வருமாறு:—

பெண்கள் நிகரானவர்கள் அல்ல

பைபிள்படி, ஆண்டவர் பெண்களுக்கு உரிய மரியாதையும், உரிமை அளித்து இருந்தாலும் கூட அவர்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள் அல்ல என்று பலமுறை வலியுறுத்தி சொல்லியுள்ளதை எதிர் மனுதாரர் தரப்பு வக்கீல் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த வழக்கில் மேல் முறையீட்டாளர்களின் கோரிக்கைகளில் ஒன்றாகிய பெண்கள் ஆலய பீடங்களில் பைபிள் வாசிக்க வேண்டுமென்று உரிமை கோருவது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

மேல்முறையீட்டாளர்களான ஆக்னஸ்குளோரி, மரகதவள்ளி இருவரும் ஆலய பணிக்குழுவில் தங்களை உறுப்பினர்களாக அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பெற்றுக்கொள்ள உரிமை உள்ளவர்கள் அல்ல.

இவ்வாறு நீதிபதி கலைவாணி தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

81. பெண்கள் கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருந்தியடைய ஏற்படுத்தின எந்தவிதமான ஐந்து வகை ஊழியங்களிலோ அல்லது லோக்கல் சபைகளுக்கடுத்த அத்தியட்சர் (மூப்பர்) உதவிக்காரர் (டீக்கன்) போன்ற பதவிகளையோ வகிக்கமுடியாது. ஏனென்றால் அங்கு கூட அதிகார பிரவேசம், உபதேச பிரவேசம் உண்டு. ஆதலால் அவள் சபைக்கடுத்த காரியங்களில் கூட எல்லாவற்றிலும் அமைதலாக இருக்கவேண்டும். ஆனால் பெபேயாளைப்போன்று சபைக்கு ஊழியக்காரியாக இருக்கலாம். அது ஒன்றே சபைக்கடுத்த காரியங்களில் அவள் செய்யக்கூடிய பணி.

82. இங்கு சபைக்கடுத்த காரியங்களில் பெண்கள் எந்தவிதமான பதவிகளையும் வகிக்ககூடாது. அவர்கள் அமைதலாக இருக்கவேண்டும் என்பதற்கு உலகப்பிகாரமான நீதிமன்றம் ஒன்று பிரசுரித்த உத்தரவு ஒன்றின் நகலை ஆதாரமாக இங்கு வெளியிடுகிறேன். இது என் கைக்கு 1990 ல் நான் பெண்கள் பிரசங்கிப்பது தவறு என எழுதியபோது ஒரு சகோதரன் இதை எனக்கு கொடுத்ததாக ஞாபகம் இருக்கிறது.




83. மேலும் கவனியுங்கள் சென்னை டவுட்டனில் இருக்கும் செயின்ட் பால் சர்ச்சில் ஒரு ஆயர் அம்மாவாக திருமதி இந்திரா பால் பணியாற்றி வருவதாக ஒரு செய்தி தினத்தந்தி, குடும்பமலர் 25.05.2008 ல் வந்தது. இவருக்கு சென்னை பேராயத்தின் பேராயர் அசரியா அவர்கள் குருப்பட்டம் 1997 ல் வழங்கியுள்ளார்கள். தாயை போல் மகள், நூலைப்போல் சேலை என்பார்கள். அதன் படி சபை எப்படியோ அப்படியே அங்கு அதன் ஊழியங்களும். இதற்கு **கடவுள் காட்டிய வழி** என தலைப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நானோ வேத வாக்கியங்களின் அடிப்படையில் இதை **சாத்தான் காட்டிய வழியாகவே** காண்கிறேன். தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்துகிறவர்கள் ஆசாரியர்கள் (ரோ 15 : 15) Priest is one who ministering the gospel of God. பெண்களுக்கு ஆசாரியத்துவம் வேதவாக்கியங்களின் அடிப்படையில் எங்கும் கிடையாது. ஆனால் பிசாசின் உபதேசங்களில் உள்ள ஸ்தாபன சபைகளில் உண்டு.

84. D.Th., B.Th., M.Th., B.D., D.D., S.T.M., Ph.D., Dr., **போன்ற இப்பிரபஞ்ச ஞானத்தினால் பெற்ற** பட்டங்களை தங்கள் பெயருக்கு முன் / பின் போட்டுக்கொண்டு **மத். 11 : 25, கலா 1 : 12, லூக் 20 : 46 ல்** கூறப்பட்டுள்ளபடி நீண்ட அங்கிகளை தரித்துக்கொண்டு **திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை** அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்கார்ந்திருக்கும், விருந்துக்களில் முதன்மையான இடங்களில் அமர்ந்திருக்கும் வேதபாரகர்கள் **இவர்கள் தான்.**

85. இவர்கள் கர்த்தர் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தர். (வெளி 2 : 6) **நிக்கொலாய் என்னும் பதம், சபையின் மக்களை ஆட்கொள்ளுதல் என பொருள்படும்.** இவர்கள் சபையின் ஆதிக்கத்தை கைப்பற்றி தங்கள் கிரியைகளின் மூலம் மக்களை ஆட்கொண்டு வருகிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் விரோதமான வழிகளை பின்பற்றுகிறவர்கள். சிறியதாக ஆரம்பிக்கப்பட்டபோது, சபைக்கு நன்மை பயக்கும் கிரியைகளாக கருதப்பட்டன. நாளடைவில் மலைபாம்பைப்போன்று சபையை நெரித்து, பரிசுத்த தன்மை அனைத்தையும் சபையினின்று அகற்றின. ஆம், கள்ள சபையாகிய இது தந்திரமுள்ளது. உங்கள் மத்தியில் காணப்படும். C.S.I. T.P.M., A.G., E.C.I. Luthern, Baptist, C.G.,போன்றவைகள் யாவும் தந்திரமுள்ள கள்ள சபைகளே. கள்ள சபை, சபையின் ஆதிகத்தை கைப்பற்றி சபையானது மனிதனால் ஆளப்படவேண்டும் என போதித்து, ஆவியின் வல்லமையை பெற்றுள்ளதாக நினைத்து தேவனுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பரிசுத்த ஆசாரியத்துவத்தை (Holy Priest Hood) உண்டாக்கிக்கொண்டு ஆரோனின் முறைக்கு திரும்பி சென்றது. இயேசு கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தை இவர்கள் புறக்கணித்து, ஆசாரியராகிய இவர்களே மத்தியஸ்தர் என்று மக்களை விசுவாசிக்க செய்து ஏமாற்றினர்.

86. இவர்கள் சபையை ஆளுகை செய்து அருட்திரு., அத்தியட்சர், பிரதம அத்தியட்சர், போன்ற பட்ட பெயர்களினால் அறியப்பட்டு, தேவனுடைய வார்த்தையை தள்ளிப்போட்டு, தங்களுடைய சொந்த போதனைகளை சபையின் மக்களுக்கு போதித்து, பெந்தெகொஸ்தே அனுபவத்தை முற்றிலும் மாற்றிப்போட்டது. சபையில் அங்கத்தினர் ஆவதின் மூலம் இரட்சிப்பின் கிருபை அளிக்கப்படும் என்றும் தவறான போதனையை இவர்கள் மக்களிடையே பரப்பினர். தேவனுடைய வார்த்தை தன் முக்கியத்துவத்தை இழந்தது. சபையின் பிரமாணங்கள் வார்த்தை வகித்த ஸ்தானத்தை கைப்பற்றின. அந்திக்கிறிஸ்துவின் ஆவி சபையில் வல்லமை பெற்றது. உங்கள் ஸ்தாபன சபைகள் யாவும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியினாலே வழிநடத்தப்பட்டு வருகிறது.

87. தந்திரமான ஆசாரியத்துவம் சபைகளை கைப்பற்றி, தவறான போதனைகளை கைக்கொண்டு, பரிசுத்த ஆவியின் வல்லமை இழந்த தெய்வ வழிபாட்டை மக்களிடையே புகுத்தும் என்பதை பலர் அறியாதிருந்தனர். பரிசுத்த ஆவியை பெற்றுள்ளோம் எனக்கூறும் மக்களிடையே பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் காணப்படவில்லை. சபை மக்கள், மனுஷர் போதிப்பதை கேட்டு அதை நிராகரிக்கின்றனர். அவர்களுக்கு அடிமைகளாகவே ஜீவிக்கின்றனர். இதை இன்றைய ஸ்தாபன சபைகளில் நீங்கள் காணலாம். இதை தான் பவுல் நான் போனபின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்கள் என எழுதுகிறான். (அப் 20 : 27-30)

88. முடிவாக, கர்த்தர் வெறுக்கும் நிக்கொலாய் மதம் தான் உங்கள் ஸ்தாப சபையின் வித்து. இதன் மூலம் மனிதன் மனிதனை அளுகை செய்கிறான். பரிசுத்த ஆவியின் ஆளுகை நிராகரிக்கபடுகிறது. வெளி 17-ம் அதியில் குறிப்பிடப்பட்ட வேசிக்கு (ஏழு மலைகள் மீது அமர்ந்திருக்கும் கத்தோலிக்க திருச்சபை. வா.9) பெண் மக்கள் உண்டு. இவைகள் தான் உங்கள் ஸ்தாப சபைகள். இவைகளெல்லாம் தாயைப்போன்று தேவனுடைய வார்த்தையை அகற்றிப்போட்டு, பரிசுத்த ஆவியின் கிரியைகளை மறுதலித்து, சபையின் மக்கள்மேல் அதிகாரம் செலுத்தி, சாத்தானால் உண்டாக்கபட்ட ஜீவனற்ற தெய்வவழிபாட்டை சபைகள் பின்பற்ற செய்து வருகின்றனர்.

89. பாருங்கள் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஒருவன் அனுப்பபட வேண்டும். அவன் தான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். அதாவது தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும். அது தேவனுடைய கட்டளையின்படி அவனுக்கு ஒதுக்கப்பட்ட பிரசங்கம் (தீத் 1 : 4) கரங்களில் பரிசுத்த வேதகமத்தை தூக்கிக்கொண்டு அனைவரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கையாள முடியாது. இப்பொழுது தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மனிதன் சுவிசேஷத்தை பிரசங்கிக்க, கேட்டவர்கள் உள்ளத்தில் விசுவாசம். விசுவாசம் கேள்வியினாலே வரும். அதாவது திருவசனத்தை கேட்பதினால் விசுவாசம் வரும் (ரோ. 10 : 13 - 17) விசுவாசித்தவர்கள் மனந்திருப்பி கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொண்டார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் (அப் 2 : 38) அதாவது ஜனங்கள் சுவிசேஷத்தை கேட்டு, அதை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெறுகிறார்கள். அது தேவனை பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாய் இருக்கிறது. தியானியுங்கள் எபே 1 : 13, 15 : 7 : 18 : 8 , 1பேது 3 : 21. இதுதான் தேவனுடைய நியமம். இதற்கு மாறான எந்த ஒரு ஞானஸ்நானத்தின் பிறப்பிடமும் பிசாசினுடையது. அது ஒரு வஞ்சகம்.

90. தேவனுடைய வார்த்தைகளை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் அவர் தம்முடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்க எந்த ஒரு பெண்ணையும் அனுப்பியதாக ஆதாரங்கள் கிடையாது. ஆனால் அதற்கு பிசாசின் பிடியிலிருந்து செயல்பட்டுவரும் வேசிக்கும், அவள் குமாரத்தி சபைகளில் மட்டும் தான் ஆதாரம் உண்டு. மேலும் நீங்கள் நன்கு கவனித்தீர்கள் என்றால் இந்த மகா வேசி மற்றும் அவள் குமாரத்தி சபைகளில் தான் பெண் பிரசங்கிகள் மற்றும் அனைத்து அருவருப்பகளும் காணப்படுகின்றன. தேவனுடைய சபையில் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள் மத்தியில்) இப்படிபட்ட அருவருப்புகள் எதுவும் கிடையாது.

91. **கிறிஸ்துவுக்குள்ளான பெண்களின் சில முக்கியமான பொறுப்புகள் :**

1. கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தில் சுவிசேஷகனோடு இருந்து பிரயாசப்படுதல் (பிலி 4 : 2,3, மாற் 12 : 40)
2. கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை தங்கள் ஆஸ்திகளை கொண்டு தாங்குதல் (லூக் 8 : 3)
3. கிறிஸ்துவின் சுவிசேஷஊழியத்தில் கர்த்தருக்கு ஊழியக்காரியாக இல்லாமல், சபைக்கு ஊழியக்காரியாக பெபேயாளைப்போன்று பணிபுரிதல். (ரோ 16 : 1)
4. ஊழியங்களில் உள்ள ஊழியகாரர்களுக்கு உதவியாக இருந்து, புருஷனும் மனைவியுமாக இணைந்து தனிபட்ட நபருக்கு தேவனுடைய மார்க்கத்தை எடுத்து சொல்லலாம் (அப் 18 : 26, 1கொரி 9 : 5)
5. ஊழியர்களை உபசரித்தல். (அப் 16 : 14,15)
6. பெண்கள் சபை கூடும் இடங்களில் ஜெபிக்கலாம், தீர்க்கதரிசனம் உரைக்கலாம் (1கொரி 11 : 4,6)
7. சபையில் உள்ள பரிசுத்தவான்களின் கால்களை கழுவலாம். (1தீமோ 5 : 10)
8. நற்கிரியைகளையும், தான தர்மங்களையும் செய்து வரலாம். (அப் 9 : 36)
9. அந்நியரை உபசரிக்கலாம். (1 தீமோ 5 : 10)
10. சபையில் உள்ள விதவைகளுக்கு உதவிகள் செய்யலாம். (அப் 6 : 1)
11. இளம் வயதினருக்கு நற்கிரியைகள் குறித்து உபதேசிக்கலாம். (தீத். 2 : 4,5)
12. சபையில் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிகள் செய்யலாம் (1 தீமோ 5 : 10)
13. எல்லாவற்றிற்கும் மேலாக அவள் தன் கூடாரத்திற்குள்ளிருந்து தன் சொந்த வீட்டை நடத்தி தன் பிள்ளைகளுக்கு விசுவாச ஜீவியத்தை கற்றுக்கொடுக்கலாம். (தீத் 2 :5 , 2 தீமோ 1 : 5)

92. முடிவாக, கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான பெண் பிரசங்கிமார்களே தேவனுடைய வார்த்தை நமக்கு கொடுக்கப்பட்ட பிரகாரமாக அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசித்து, அதன்படி நடவுங்கள். அதற்கு உங்கள் சொந்த வியாக்கியானத்தை செய்யாதீர்கள். தேவனே தம்முடைய வார்த்தைக்கு வியாக்கியானி.

தேவனுடைய வார்த்தைக்கு மிஞ்சி நடக்காதீர்கள். நான் எழுதிய இந்த புத்திமதியான தேவனுடைய வார்த்தையை அசட்டைபண்ணி அதை அவமதித்து உங்கள் செவிகளை அதற்கு சாய்க்காமலும் அவைகளை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாமலுமிருந்து உங்கள் கழுத்தை கடினப்படுத்தாதீர்கள். கர்த்தர் உங்களுக்கு உணர தக்க இருதயத்தையும் காணதக்க கண்களையும், கேட்கதக்க காதுகளையும் இந்தநாள் வரைக்கும் கொடுக்கவில்லை. ஆதலால் நீங்கள் உங்கள் மனஇஷ்டபடி நடந்து, எனக்கு சுகம் உண்டாகும் என உங்கள் உள்ளத்தில் உங்களை தேற்றிக்கொண்டால், கர்த்தர் நிச்சயமாக உங்களை மன்னிக்க சித்தமாயிரார். தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை உங்கள் நடத்தைகளினாலும், கிரியைகளினாலும் தீட்டுப்படுத்தாதீர்கள் நீங்கள் சுவிசேஷ ஊழியத்தில் பங்குகொண்டு தேவனுடைய சபைக்கு இடறலாகாதிருங்கள். கர்த்தர் நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களை கடிந்துக்கொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாய் இருந்து மனந்திரும்பு என்கிறார். இதை உங்களுக்காக தான் கூறுகிறார். ஆதலால் வாருங்கள், நீங்கள் உங்கள் ஆத்துமாவை யோ 6 : 66 க்குள் ஆதாயப்படுத்தி, மிருகத்தின் முத்திரை 666 யை (வெளி 13 : 18) தரித்துக்கொள்ளாது, உங்கள் ஆத்துமாவை யோ 6 : 68 க்குள் ஆதாயப்படுத்தி நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். சத்தியஆவியாகிய பரிசுத்தஆவி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்வாராக.

93. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. ஆமென்

மே - ஜுலை / 2009

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

## *இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது.*
## *நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது*

1. பெண்பார்க்கும் படலம் நாள் (அரமன்னம், குலசேகரம், குமரி மாவட்டம் - 629161) 06.06.2009
2. இரு குடும்பத்தினரும் மனம் பொருந்திய நல்ல நாள் (சென்னீர்குப்பம், சென்னை) 20.06.2009
3. நிச்சயதார்த்தம் - தேவனுடைய பார்வையில் திருமண நாள்
(காலை 10.00 - 11.00 மணியளவில்
அரமன்னம், குலசேகரம், குமரி மாவட்டம் - 629161) 11.07.2009
4. மணமகன் : இம்மானுவேல் ஒன்டர்புல்
(சுவி. சகோ. காலேப் யோசுவா அவர்களின் இரண்டாவது மகன் - சென்னை)

மணமகள் : ஷபீனா
(பாஸ்டர். சகோ. விஜயகுமார் அவர்களின் மூத்த மகள்
அரமன்னம், குலசேகரம், குமரி மாவட்டம் - 629161)

5 திருமணம் : கல்வாரி பாப்திஸ்ட் பவுண்டேஷன் சர்ச்
(அரமன்னம், குலசேகரம், குமரி மாவட்டம் - 629161) 14.08.2009

6. நேரம் : காலை 10.00 - 11.00 மணியளவில்
7. திருமண ஆராதனை நடத்துபவர் : சுவி. சகோ. காலேப் யோசுவா
8. வரவேற்பு : திருமணம் முடிந்தவுடன் P.N.N. மினி மண்டபம், குலசேகரம், குமரி மாவட்டம் - 629161)

**எங்களை நேர்வழியாய் நடத்திவந்த, வருகிற, வரயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம்.**

கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு பிரியமானவர்களே நீங்கள் கலியாண விருந்துக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கப்படுகிறீர்கள். இதை திருமண அழைப்பாக ஏற்றுக்கொண்டு வாருங்கள், நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ந்து களிகூர்ந்து கர்த்தருக்கு துதி செலுத்துவோம்.

தங்களை அன்புடன் அழைக்கும்
**சகோ. காலேப் யோசுவா**
**மற்றும் குடும்பத்தினர்**

# *யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின் படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்*

1. கடந்த செய்தி தொகுப்பு **மரித்த தீர்க்கதரிசியாகிய** சாமுவேல் **மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த இராஜாவாகிய சவுலோடு சம்பாஷிக்க** முடிந்தது உங்கள் கரங்களுக்கு வந்து சேர்ந்தது முதல் இதுவரை பலர் தங்கள் இருதயத்தின் சிந்தனைகளை வெளிப்படுத்தினார்கள்.

2. **கோயம்புத்தூர்** : கோயம்புத்தூரிலிருந்து சகோ. ஆபிரகாம் ஒருநாள் காலை வேளையில் என்னோடு தொலைபேசியில் தொடர்புக்கொண்டு செய்தி தன் ஆத்துமாவிற்கு பிரியோஜனமாக இருந்தது என சாட்சி சொல்லி, கர்த்தருக்கு நன்றி செலுத்தினார். நான் கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

3. **ஊர், பேர் தெரியாத நபர் :** நான் உனக்கு இதையெல்லாம் எனக்கு அனுப்பாதே என்று கூறி கடந்த முறை திருப்பி அனுப்பி வைத்தேன். பின் ஏன் அனுப்பி வைத்தாய்? ஐயா, நான் பொதுவாக திரும்பி வரும் பத்திரிகைகளை எனது தபால் விலாசங்களிருந்து நீக்கி விடுவது வழக்கம். உங்களுக்கு தவறாக மீண்டும் வந்திருங்கலாம். நீங்கள் உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை கூறினால் இப்பொழுதே உங்கள் பெயரை விலாசங்களிலிருந்து எடுத்து விடுகிறேன் என்றேன். அதற்கு அவர் நான் உன்னை செருப்பால் அடிப்பேன் உன்னை சிக்கல்களில் பிணைக்க வைத்து உள்ளே தள்ளிவிடுவேன் மீண்டும் எனக்கு அனுப்பினால் என்றார். நானோ சகோ. உங்கள் விலாசத்தை கொடுங்கள் என்றேன். அதற்கு அவர் உன் பத்திரிக்கையை திருப்பி அனுப்பி வைத்துள்ளேன், பார்த்துக்கொள் என்றார். இப்படியும் ஒரு மிரட்டல் / அடாவடித்தனம்.

4. **ஓசூர் :** ஒரு சகோதரி என்னிடம் சகோதரனே உங்கள் பத்திரிகையை இந்த விலாசத்திற்கு இனி அனுப்ப வேண்டாம் என்று கூறினார்கள். அவர்கள் விலாசம் கொடுக்க நான் அதை எனது தபால் விலாசங்களிருந்து எடுத்து விட்டேன். இருவரும் ஒருவருக்கொருவர் நன்றி கூறிக்கொண்டோம்.

5. **சென்னை :** சகோ அந்தோனி ஜோசப், சகோதரரே நீண்ட இடைவேளைக்கு பின்பு உங்களோடு தொடர்புகொள்கிறேன். எனக்கு எந்த சபைக்கும் போக விருப்பமில்லை. ஏனென்றால் சபைகளில் புது புது உபதேசங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. எங்கும் ஒரு மனதுடன் உட்கார முடியவில்லை. ஆதலால் இந்நாட்களில் வீட்டிலிருந்தே வேதத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் தியானிக்கிறேன். நீங்கள் கடந்த இதழில் எழுதிய காரியம் எனக்கு ஒரு நல்ல ஆவிக்குரிய ஆகாரமாக இருந்தது. கர்த்தருக்கு சித்தமான வேளையில் ஒருவரையொருவர் சந்திப்போம் என்றார்.

6. **புதுக்கோட்டை (தஞ்சாவூர்) :** தொடக்கமே மரியாதையற்ற பேச்சு. சகோதரனே நீங்கள் யார் என்றேன். நீ புதுக்கோட்டை வந்திருந்த போது உன்னை ஓட்டலில் தங்க வைத்து உபசரித்தவன் என்றார். அவருடைய வார்த்தைகள் மிகவும் மரியாதை குறைவாக இருந்ததால் போனை கீழே வைத்து விட்டேன். பல ஆண்டுகளுக்கு முன்பு நான் திருவைகுண்டத்தில் இருந்த போது சென்னையிலிருந்து சகோ. தேவனேசன் எனக்கு ரூ. 400/- அனுப்பிவைத்து உடன் புதுக்கோட்டை சென்று சகோ. ஜான் நேசகுமாரை சந்தித்து அவரை உற்சாகப்படுத்துக்கள். அவர் புதுக்கோட்டை சகோ. ஜெயராஜ்யின் கள்ள உபதேசத்திலிருந்து வெளிவந்து, சோர்ந்து போய் காணப்படுகிறார் என்றார். நானும் உடனே சென்று சகோதரனை சந்தித்தேன். ஆனால் அவரும் அவருடைய மனைவியும் பொதுபணிகளில் இருந்துக்கொண்டு, சகோதரன் சபையில் மேய்ப்பனாக இருப்பது வேதத்தின் அடிப்படையில் இல்லை என கூறினேன். அவருக்கு புத்தி சொல்ல ஆரம்பித்தேன். அவர் என் புத்தி மத்திகளை கேட்கவில்லை. ஆனால் பல ஆண்டுகள் அமைதியாக இருந்து, இப்பொழுது திடீரென்று என்னை மரியாதை குறைவாக பேச காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அறிவேன். சத்தியத்தை சொன்னத்தினால் நான் அவருக்கு சத்துருவானேன். ஆனாலும் நான் அவரை நேசிக்கிறேன். அவர் என்னை வெறுக்கிறார். ஆனால் அது என்னை பாதிக்காது.

7. **ஈரோடு :** சகோதரர். சார்லின் துரை தொலைபேசியில் என்னுடன் தொடர்புக்கொண்டு தன்னை மறக்காமல் இதுவரை அவர் எந்த விதமான உதவியும் என் ஊழியத்தில் எனக்கு செய்யாவிட்டாலும், அவ்வப்போது பத்திரிக்கை அவர் கரங்களுக்கு கிடைப்பது குறித்து மிக்க நன்றி கூறினார்.

8. **திருச்சி :** சகோ. நித்தியானந்தம், தனக்கு வயது 92 ஆகிறது. கண்பார்வையும் சற்று மங்கி விட்டது. ஆனாலும் தன்னை மறக்காது அவ்வப்போது பத்திரிகை அனுப்பி வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது என ஒரு போஸ்ட் கார்டு எழுதினார். சகோ. ராபின்சன், சகோதரரே உங்கள் உபதேசம் தீர்க்கதரிசிக்கு மாறாக காணப்படுகிறதே என்றார். நானோ நன்கு தியானித்து, பின் முடிவு எடுங்கள் என்றேன். அதன் பின் அவரரிடமிருந்து பதில் எதுவும் கிடையாது. ஏனென்றால் நான் தீர்க்கதரிசியின் உபதேசத்தையே கடைப்பிடிக்கிறேன்.

9. **சென்னை :** சென்னை, திருவொற்றியூரிலிருந்து சகோ. பிரான்சிஸ், கிறிஸ்துவை அறியாத மக்கள் நிறைய உண்டு. அவர்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்யுங்கள். நான் கிறிஸ்தவன். உங்கள் போதகம் எனக்கு தேவையில்லையென கேட்டுக்கொண்டார்.

10. **ஓசூர் :** முன்பு பேசிய சகோதரியே மீண்டும் பேசினார்கள். உங்கள் பத்திரிகையை அனுப்பவேண்டாம் என கூறினேன். ஆனால் மீண்டும் வந்திருக்கிறது என்றார்கள். சகோதரி நான் உங்கள் விலாசத்தை நீங்கள் முன்பு பேசியபொழுதே எடுத்துவிட்டேன். மீண்டும் உங்கள் விலாசத்திற்கு வந்திருக்கிறது என்கிறீர்கள். காரணம் என்னவென்று தெரியவில்லை என்றேன். அவர்கள் முன்பு எங்கள் சபை விலாசத்திற்கு வந்தது.இப்பொழுது எங்கள் வீட்டு விலாசத்திற்கு வந்துள்ளது என்று கூறினார்கள். **இயேசு நம்மோடு ஜெபவீடு** என அறிந்து அவர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களின் இரு விலாசங்களையும் எடுத்துவிட்டேன்.

11. **பொள்ளாச்சி :** மொட்டை கடிதம் ஒன்று பொள்ளாச்சியிலிருந்து வந்தது. என்னை தாறுமாறாக திட்டி எழுதி உனக்கு எதற்கு ஐயா ஊழியம் பேசாமல் மாவுமில் வேலையை ஒழுங்காக செய் அல்லது கத்தரிக்காயோ கருவாடோ விற்பது நல்லது. உன் பத்திரிகையை படித்து இரட்சிக்கப்பட்ட ஒரு ஆள் உண்டா? என கேட்டு எழுதியிருந்தார். இவர் சகோ. W.S. வேதா என்பதை எனக்குள் இருந்த ஆவியினால் அறிந்துக்கொண்டேன். இவர் என்னிடம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர். நாய் கக்கினதை தானே திரும்ப தின்னும் என்ற பழமொழிக்கு ஏற்றவாறு இந்நாட்களில் திருத்துவ ஸ்பாதன சபைகளை சார்ந்து, பிழைப்புகடுத்த வழிகளில் சிக்கி சுகபோகமாக வாழ்ந்து வருகிறார்.

12. **காட்பாடி :** சகோ P. ராஜுபத்மநாதன். இவர் சனிக்கிழமை ஓய்வு நாள் போதகர். அதாவது செவன்த் டே அட்வெண்டிஸ்ட் சபையை சார்ந்தவர். நீர் பெற்றுள்ளதே அசுத்த ஆவியின் அபிஷேகம் என்று அறியாமல் மற்றவர்களை குறை சொல்லலாமா? ஒரு சூன்யக்காரி மரித்த மெய்த்தேவனின் தீர்க்கதரிசியை எழுப்பினாள் என்று அவளை தேவனுக்கு மேலாக உயர்த்தி கூறியுள்ளீரே என என்னை குறித்து எழுதுகிறார். ஆனால் நானோ அப்படி எழுதவில்லை என்பதை கடந்த இதழை வாசித்த நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மேலும் இவர் சகோதரரே இனிமேல் இப்படிபட்ட பொய்யானவைகளை அனுப்பவேண்டாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்க படுகிறது என எழுதியுள்ளார். பாருங்கள் நான் எழுதாததை எழுதியதாக கூறி தான் குருடனாக இருந்துக்கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்ட முயற்சிக்கிறார். ஆம் நிச்சயமாக குருடர்களுக்கு வழிகாட்டும் ஒரு குருடன் தான் இவர் என்பதை நான் ஆவியில் உணர்ந்தேன்.

13. ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். சகல எண்ணங்களையும், சகல செய்கைகளையும் நியாயம் தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கர்களையும், துன்மார்க்கர்களையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். ஆறுதல் அடைந்தேன். ஆம், கர்த்தர் தம்முடைய சம்பத்தை சேர்க்கும் நாளில் தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை காண்பார்கள்.

14. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்திஅடைவதற்கான ஆகாரத்தை **இயேசுவே வாரும்** செய்தி தொகுப்பு மூலம் உங்களுக்கு அவ்வப்போது கொடுத்து வருகிறேன். இதற்காக நீங்கள் ஒரு பைசா கூட செலவு செய்யாவிட்டாலும், இது உங்கள் இல்லத்திற்கு உங்கள் கரங்களில் வந்து சேர்கிறது. இதற்காக ஆகும் செலவு என் குடும்ப செலவுகளில் ஒரு பாகமாக இருக்கிறது. அவ்வப்போது சில சகோதரர்கள் உதவி செய்வதும் உண்டு. கர்த்தருடைய வருகை கால தாமதமாகிக்கொண்டிருக்கிறது. காரணம் அவருடைய மந்தையில் / சரீரத்தில் உள்ள அந்த கடைசி ஆடு / ஆத்துமா இன்னும் மந்தையில் / சரீரத்தில் வந்து சேரவில்லை. ஒருவேளை அந்த ஆடு / ஆத்துமா நீங்களாக ஏன் இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தை என் மனதில் கொண்டு உங்களுக்கு இந்த செய்தி தொகுப்பு அவ்வப்போது அனுப்பப்பட்டு வருகிறது. என்னிடமுள்ள விலாசங்கள் அனைத்திற்கும் அனுப்பிவைக்க என்னால் முடியவில்லை. ஆனாலும் கர்த்தருடைய வழிநடத்துதலின் படி அது உங்கள் கரத்திற்கு வந்து சேர்கிறது. அதை பிரயோஜன படுத்திக்கொள்வது, நிராகரிப்பது உங்கள் சுயாதீனம். ஒரு வேளை உங்களுக்கு இந்த ஆகாரம் தேவையில்லை என்றால் **இயேசு நம்மோடு ஜெபவீடு** குடும்பத்தினரை போன்று எங்களுக்கு தேவையில்லை, இனி அனுப்ப வேண்டாம் என்று எனக்கு தொலைபேசியில் கூறினால் போதும் நான் நிறுத்திவிடுகிறேன். 50 பைசாகள் செலவு செய்து ஒரு போஸ்ட் கார்டில் **வேண்டாம்** என எழுதினாலும் போதும்.இதை விட்டு விட்டு அநாகரீமான முறையில் நடந்துக்கொள்வது அஞ்ஞானமானதும், அநியாயமானதும், அயோக்கியமானதுமாயிருக்கிறது என்று உங்களுக்கு எழுத கடமை பட்டிருகிறேன். உங்கள் நெஞ்சின் வழிகளில் நடக்க உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் என்னை தூற்றினால் அது ஒருகாலும் என்னை பாதிக்காது. ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உங்களை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று மட்டும் அறிந்துக்கொள்ளுங்கள், இதை மறந்து விடாதீர்கள்.

**சகோ. காலேப் யோசுவா**